பக்கங்கள் பத்து
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 1 வியாழக்கிழமை (18-10-2001) தொலைபேசி: 3378 ஒலி 311

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564,566, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
(சி-2751)

## யாழ் மாவட்ட தேர்தலில்!

# கூட்டணி-காங்கிரஸ்கூட்டுசேர்ந்தன

# உதயசூரியன் சின்னத்தில் போட்டி

## தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக புலிகளை ஏற்றுக்கொண்டனர்!

(நமது அரசியல் நிருபர்)

டிசம்பர் மாதம் 5ம்திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் (சுரேஷ் அணி) ஆகிய கட்சிகளுடன் இணைந்து அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

இவ்இணக்கப்பாட்டை அடுத்து கடந்த ஒருவார காலமாக இழுபறி நிலையில் காணப்பட்ட கூட்டமைப்பு முயற்சி நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ளதாக தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்ட மத்தியஸ்தர்குழு 'வலம்புரி'க்கு தெரிவித்துள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி. ஆர் எல்.எவ், (சுரேஷ் அணி) ஆகியநான்கு கட்சிகளுக்கும் இடையே தேர்தல் கூட்டுத் தொடர்பாக கடந்த ஒருவார காலமாக நிலவியஇழுபறி நிலை நேற்றுநள்ளிரவுவரை நீடித்தகூட்டத்தில் உதயசூரியன்சின்னத்தில் போட்டியிட தமிழ்க்காங்கிரஸ் இணங்கியதையடுத்து முடிவுக்குவந்துள்ளது.

இக்கூட்டம் நேற்றுநடைபெற்றுக்கொண்டிருந்த சம

(10 ம் பக்கம் பார்க்க)

## சமயா சமய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர் அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களில் சமயாசமய ஊழியர்களாகப் பணி புரியும் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

நேற்றுக் கூடிய அமைச்சரவையில் நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக முடிவு செய்யப்பட்டது.

180 நாட்களுக்கு குறையாமல் சேவையாற்றிய சமயா சமய ஊழியர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப் படுவரென அமைச்சர் அத்தாவுட செனவிரத்தன தெரிவித்துள்ளார்.

அரசதிணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச கம்பனிகளில் பணியாற்றும் சமயா சமய ஊழியர்கள் அனைவரும் இந்த நிரந்தர நியமனம் பெறத்தகுதியுடையவர்கள் எனவும். இந்நியமனங்கள் அடுத்த வாரமளவில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது

(இ)

## பருத்தித்துறையில் பாழடைந்த வீட்டில் ஆணின் சடலம்

(துன்னாலை, மந்திகை நிருபர்கள்)

பருத்தித்துறை மாதனைப் ... அப்பகுதி பொது மக்கள் பொலிஸாருக்கு கொடுத்ததகவலையடுத்து அங்கு விரைந்த

## நந்தமித்திர இராஜினாமா

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உதவிச்செயலாளர்பதவி உட்பட ஐந்து பதவிகளை தான் இராஜினாமாச் செய்துள்ளதாக அக் கட்சியின்

## பொ. ஐ. முன்னணியுடன் சிறிசேன கூரே இணைவு?

ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர்: பிறேமதாசாவின் வலதுகரமாக விளங்கியவருமான சிறிசேனகூரே பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக ஊகங்கள் வெளியாகியுள்ளன

'பாவுகிபெரமுன' எனும் கட்சியை ஆரம்பித்த கூரே அக்கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தார்

இதன்காரணமாகநாட்டைவிட்டு வெளியேறி அவுஸ்ரேலியாவில் தங்கியிருந்த இவர் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் நோக்குடன் இன்று நாடுதிரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது [இ]

(துன்னாலை, மந்திகை நிருபர்கள்)

பருத்தித்துறை மாதனைப் பகுதியிலுள்ள பாழடைந்த வீட்டிலிருந்து ஆணின் சடலமொன்று நேற்று முன்தினம் இரவு பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி வீட்டிற்குள் சடலம் கிடப்பதை அவதானித்த அப்பகுதி பொது மக்கள் பொலிஸாருக்கு கொடுத்தக வலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட இச்

(10ஆம் பக்கம் பார்க்க)

உட்பட ஐந்து பதவிகளை தான் இராஜினாமாச் செய்துள்ளதாக அக் கட்சியின் முன்னாள் அமைச்சர் நந்த மித்திர எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதத்தை நேற்று ஜனாதிபதிக்கு எக்கநாயக்க அனுப்பி வைத்துள்ளார். [ந-4]

டியிடவுள்ளதாக ஊகங்கள் வெளியாகியுள்ளன

'புரவசிபெரமுன' எனும்

டியிடும் நோக்குடன் இன்று நாடுதிரும்புவார் என எதிர் பார்க்கப்படுகிறது [இ]

# பொலிஸாரால் விழிப்புக்குழுவினர் கைது
# பருத்தித்துறை பிரதேசத்தில் நேற்றுப் பூரண ஹர்த்தால்!

[மந்திகை – துன்னாலை]

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று பொதுமக்களால் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

அப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த விழிப்புக் குழுவினரை பருத்தித்துறை மாதனைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சடலம் தொடர்பாக பொலிஸார் கைது செய்ததைக் கண்டித்தும், திருட்டைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படாததைக் கண்டித்துமே இக்ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

இதனால் பருத்தித்துறை யாழ் பஸ்சேவை ஸ்தம்பிதமடைந்தது பருத்தித்துறை நகரப்பகுதிக்கடைகள், பாடசாலைகள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள், வங்கிகள் யாவும் முற்றாக செயலிழந்தன.

இதேவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விழிப்புக்குழுவினரை விடுதலை செய்யுமாறு கோரி பருத்தித்துறை நகரமையத்தில் ஒன்று திரண்ட பொது மக்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஊர்வலமாக பருத்தித்துறை மா

(10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான
# பொருளாதாரத்தடைக்கு எதிராக மனுத்தாக்கல்

(கொழும்பு)

வன்னிப் பிரதேசத்திற்கு எரிபொருள் மற்றும் ஏனைய உணவுப்பொருட்களை வவுனியாவில் இருந்து எடுத்துச்செல்வதற்கு தடை விதிக்கும் பாதுகாப்பமைச்சின் சுற்று நிருபத்தைநீக்கக் கோரி அடிப்படை மனிதஉரிமை மீறல்மனுவொன்று கொழும்பு மேல்நீதி மன்றில் நேற்று தாக்கல்செய்யப் பட்டுளளது.

வவுனியாவைச் சேர்ந்த கந்தையா சிவநேசன் என்ற நபர் உட்பட ஐந்து பேர்இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

போதுமானஎரிபொருட்கள் மற்றும் பொருட்களை வன்னிக்கு எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்த சுற்று நிருபம் தடையாக இருப்பதன்காரண

[2ம் பக்கம் பார்க்க]

# வெலிகந்தையில் புலிகள் தாக்குதல்
# மூன்று படையினர் ஸ்தலத்தில் பலி

(மட்டக்களப்பு)

வெலிகந்தைப்பகுதியில்நேற்று காலை 7.15 மணியளவில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலினால் மூன்று படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். இரு ஊர்காவல் படையினர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் இரண்டு சிவிலியன்கள் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாகவும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

(10 ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### படிவம்

தொழில் நுட்பக்கல்லூரி அனுமதி 2002 ற்கான படிவம விற்பனையாகின்றது. தொடர்பு:- நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். [3852]

### O|L MATHS

பழைய, இடைக்கால, புதிய திட்டங்களுக்கமைய தொடர்ந்து கற்பிப்பதில் 36 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distn ction பெறு பேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு:- க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி. (3854)

### திருமண சேவை

1965, 66, 67 ஆகிய ஆண்டுகளில் பிறந்த பட்டதாரி மணமகன்களும் 1967, 68, 69, 70 ஆகிய ஆண்டுகளில் பிறந்த டாக்டர்கள், பொறியியலாளர்கள், வர்த்தகர்கள், வெளிநாட்டுபிரஜா உரிமை பெற்ற மணமகன்களும் உண்டு; (எல்லா மதத்தவர்களுக்கும்) தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, 770, பருத்தித்துறை வீதி, (அம்பாள் சைவ உணவகம் மேல் மாடி) நல்லூர். (செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்கள் நேரம் 10.30-6.00 வரை) [3853]

# கொழும்பில் பாதுகாப்பு தீவிரம்
# 40 புலிஉறுப்பினர்கள் ஊடுருவலாம்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலைமுன்னிட்டு தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இப் பாதுகாப்பின் பெருமளவு இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலை அடுத்து அரசியல் வாதிகளை இலக்குவைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்ளலாமென்ற அச்சத்தினாலேயே கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகள் தலைநகர் கொழும்பினுள் ஊடுருவி இருப்பதாக புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதை அடுத்தே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சுமார் 40 ற்கும் அதிகமான விடுதலைப்புலிகள் கொழும்புநகருக்குள் ஊடுருவி இருப்பதாகவும், புலிகளின் முக்கிய தலைவர் ஒருவருடன் தற்கொலைக் குண்டுதாரிகளும், புலனாய்வுப்பிரிவினரும் இந்த ஊடுருவலுக்குள் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரில் முக்கிய அரசியல் தலைவர்களுக்கு குறிவைத்துஇத்தாக்குதல் கள் மேற்கொள்ளப்படலாம் என்ற தகவல்களை அடுத்து அரசியல் தலைவர்களின் நடமாட்டம் பாதுகாப்புப் படையினரால்கண்காணிக்கப்பட்டு வருவதுடன் பிரதான வீதிகளில் தீவிரரோந்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## தூவானம் அறிமுக விழா

குருநகர் இளைஞர் கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் பிரபல எழுத்தாளர் அ.யேசுராசாவின் 'தூவானம்' கலை இலக்கியப்பதிவுகள் என்ற நூலின் அறிமுக விழா எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது

எழுத்தாளர் செம்பியன் செல்வனின் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் இந் நூல் விமர்சனத்தை குப்பிளான் ஐ சண்முகன் பொன் பூலோகசிங்கம், அருட்திரு அ.ஜெயசேகரம் அடிகள் யோ. ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர் (செ-59)

## பிரிட்டனின் தாக்குதல் இலக்கு ஆப்கான் மட்டுமே

### வெளியுறவு அமைச்சர் தெளிவுபடுத்துகிறார்

(லண்டன்)

அமெரிக்கா மீது நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து ஆப்கான் தவிரவேறு எந்த நாட்டின் மீதும் தாக்கும் எண்ணம் பிரிட்டனுக்கு கிடையாதுஎன பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஜேக்ஸ்ரே தெரிவித்துள்ளார்.

ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதலிற்கு வளைகுடா அரபு நாடுகள்வழங்கிய ஆதரவு பிரிட்டனுக்குதிருப்தியளித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (உ-2)

## இளங்கதிர் சனசமூக நிலைய பயனாளிகள் 33 பேர் சுயமுயற்சி கடன் பெறுவர்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பத்தைமேனி இளங்கதிர் சனசமூக நிலையமும் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து அப் பகுதியில் உள்ள 33 பயனாளிகளுக்கு மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை சுயமுயற்சிக் கடனாக வழங்கவுள்ளது

யு.என்.எச்.சீ ஆர் நுண்கருத் திட்டத்தின் கீழ் சுயதொழில் ஊக்குவிப்புக்காக மேற்படி உதவுதொகை கோப்பாய் பிரதேச செயலர் ஊடாக இளங்கதிர் சனசமூக நிலையத் தலைவர் எம். பொன்னுத்துரையிடம் நேற்று காசோலை கையளிக்கப் பட்டது.

மேற்படி பயனாளிகளுக்குரிய கொடுப்பனவுகள் எதிர்வரும் 22ந் திகதி நிலையத்தில் வைத்து வழங்கப்படுமென்றும் பயனாளிகள் 33பேரையும் சமுகம் கொடுக்குமாறும் நிலையத் தலைவர் எம். பொன்னுத்துரை கேட்டுள்ளார். (இ)

## விருத்தப் பாஓதற் போட்டி முடிவுகள்

(உடுவில்)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டசகலகலாவல்லி விருத்தப்பா ஓதற் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**பிரிவு-1 (ஆண்)**

முதலாம்இடம்தே.நிரோஸ் யாழ். இணுவில் இந்துக் கல்லூரி இரண்டாம் இடம் சி.சிவதர்சன் யா.இணுவில் இந்துக் கல்லூரி மூன்றாம் இடம் கு.நிர்மலன் யா.ஸ்கந்தவரோதயக் கல்லூரி

**பிரிவு-1 (பெண்)**

முதலாம் இடம் ம.பிரிந்தா யா. ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாம் இடம் ஜெ.ஜெயப்பிரியா யா.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மூன்றாம்இடம் வி.றஜிந்தாரிணி யா.இணுவில் இந்துக் கல்லூரி.

**பிரிவு-2 (ஆண்)**

முதலாம் இடம் நா.மாதவன் யா.ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாம் இடம் ப.இராதாகிருஷ்ண சர்மா யா. ஸ்கந்தவரோதயக் கல்லூரி மூன்றாம் இடம் ம.மதூஷன் யா.ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**பிரிவு-2 (பெண்)**

முதலாம்இடம் கு.லக்ஸனா யா. ஸ்கந்தவரோதயக் கல்லூரி இரண்டாம் இடம் ம.தாரணி யா.கந்தவரோதயக் கல்லூரி மூன்றாம் இடம் சு.தீபலதா யா.கந்தவரோதயக் கல்லூரி. (உ-129)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(நவாலி)

மானிப்பாய் சுகாதார சமூக சுற்றாடல் விவகார சபையின் வருடாந்தபொதுக் கூட்டம் இரா. வசந்தசேனன் தலைமையில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு மானிப்பாயில் நடைபெறும் என செயலாளர் இ.வல்லிபுரம் தெரிவித்தார்

பிரதம விருந்தினராக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி க. கணேஷராசா கலந்து சிறப்பிப்பார (எ-22)

## துரித கதியில் கட்டட வேலை

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று துரிதகதியில் அமைக்கப்படடு வருகிறது. (செ-10)

## கலாசார விழா

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதி தெற்கு வேலணைப்பிரதேச கலாசார விழா அண்மையில் வேலணைப்பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. (உ-75)

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த(சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ். மாவட்ட மாணவர்களுக்கு இம்மாதம் 19ஆம், 20ஆம திகதிகளில் நடைபெறவிருந்த கணிதம, விஞ்ஞானமும்தொழில் நுட்பமும ஆகிய பாடங்களுககுரிய பயிற்சிப் பரீட்சைகள இம்மாதம்22ஆம், 23ஆம் திகதிகளுக்கு பிற் போடப்பட்டுளளன. (உ-15)

**வன்னிக்கான**

மாக விவசாயிகள் கடற்தொழிலாளர்கள் உட்பட வன்னிப் பகுதியில் வாழும் சகல பொது மக்களும் பல கஷ்ரங்களை எதிா நோக்குகின்றனர்.

அரசியல் யாப்பின் 12 வது திருத்தச் சட்டத்தின்படி இது சம உரிமையை மீறுவதாக உள்ளது, நாட்டின் எந்தப் பகுதிகளும் இல்லாத நடைமுறையாகவும் இது அமைந்துள்ளது என்றும அம் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் பாதுகாப்பு அமைச்சின செயலாளர், 21 வது இராணுவ பிரிவின் கொமாண்டர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுளளனர். [ந-4]


## வாழ்த்துகின்றோம்

எமது கிராமத்தைச் சேர்ந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கீழ்வரும் மாணவர்களை எல்லாம்வல்ல கற்பகப்பிள்ளையார், ஞானவைரவர் அருள்பெற்று மென்மேலும் கல்வியில் மேன்மையடைய வாழ்த்துகிறோம்.

| | | |
|---|---|---|
| புண்ணியராசா தபோதரன் | - 146 புள்ளிகள் | யாழ்ப்பாணக் கல்லூரி |
| சிவகுமார் பகீரதி | - 143 புள்ளிகள் | " " |
| இராமகிருஷ்ணன் வேல்மகிபன் | - 140 புள்ளிகள் | யா.பிளவத்தைஅ. மி. த. க பாடசாலை |
| ஸ்ரீவிக்னேஸ்வரன் உமாசுதன் | - 136 புள்ளிகள் | யா. பொன்னாலை வரதராசா வித்தியாலயம் |
| குலநாயகம் சோபனா | - 133 புள்ளிகள் | யாழ்ப்பாணக் கல்லூரி |
| வரதராசா கஜந்தினி | - 131 புள்ளிகள் | " " |
| மகாலிங்கம் விஜிதா | - 130 புள்ளிகள் | யா. பிளவத்தை அ. மி.த.க பாடசாலை |

வாழ்த்துவோர்

- கற்பகச்சோலை நன்மைவிருத்திச் சங்கம்
- கற்பகச்சோலை சன சமூக நிலையம்
- கற்பகச்சோலை கிராம முன்னேற்றச் சங்கம்
- கற்பகச்சோலை மாதர் அபிவிருத்திச்சங்கம்
- இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகம்

வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

(C/2752)


அன்பு மாணவர்களே!

**17-10-2001 அன்று நவராத்திரி பூசை**

ஆரம்பமாகியதையொட்டி

## 'கவிதை மாலை'

பகுதியை வலம்புரி வெளியிட்டுவருகிறது. மாணவர்களாகிய உங்களின் கவிதையும் இடம்பெற வேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கற்கும் தரம் மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

**"வலம்புரி"**
இல. 15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு; கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம்.

(ஆ-ர்)

# செய்தித் துளிகள்

## லஞ்சம் பெற்ற கி.சே.கைது

(கொழும்பு)

கொழும்பில் வதிவதாக உறுதிப்படுத்தி சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக கிராம சேவையாளர் ஒருவருக்கு 1500 ரூபா லஞ்சம் வழங்கியபோதுஅந்தக் கிராம சேவையாளர் லஞ்ச தடுப்புப் பிரிவினரிடம் வகையாகமாட்டிக் கொண்டார்.

இக்கிராமசேவையாளருக்கு லஞ்சம் வழங்குவதற்கு உடந்தையாக இருந்த சமாதான நீதிவான் ஒருவரும் கையும் மெய்யுமாக பிடிபட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இருவரையும் தற்போது லஞ்ச ஊழல் குற்றத் தடுப்பு பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (வ)

## உயிரிழப்பு

(கொழும்பு)

வெலியோயாப் பகுதியில் விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் இரு படைவீரர் பலியாகினார் என்றும் புலிகள் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ந-4)

## கொழும்பில் சுயேட்சைக் குழு வேட்பு மனு தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான மனுவொன்றை கொழும்பு மாவட்டத்தில் முதலாவது சுயேட்சைக்குழுவொன்று தாக்கல் செய்துள்ளது.

இச் சுயேட்சைக்குழுவின் தலைவரான ரணவீரபந்துல சுனில் என்பவரே கட்டுப் பணம் செலுத்திவேட்புமனுத் தாக்கல் செய்தவராவார். (வ)

## சித்திரபாட செயலமர்வு

(மந்திகை)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 20, 21 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் சித்திர பாடம்கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறுவலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-23)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கக் காரியாலயத்தில், தலைவர் டாக்டர் ந. சிவராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ-104)

## வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நாளைவெள்ளிக்கிழமை மு.ப. 10 30 மணிக்கு வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ. அருந்தவநாதனின் அறிமுகவுரையைத் தொடர்ந்து 'கடவுள் வடிவங்கள்' என்னும் தலைப்பில் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர் அ. குமார வடிவேல் சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

## சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுதுமலைப் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரின் இரண்டுபவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சுதுமலை அம்மன் கோவிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது. (ந- 5)

## ஐவர் கௌரவிப்பு

[ஊர்காவற்றுறை]

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் இடம் பெற்ற கலாசார விழாவில் ஐவர் கௌரவிக்கப் பட்டனர்.

வேலணையைச் சேர்ந்தவர்களான விஷகடி வைத்தியர் திருமதி இ அனுஷம்மா, சமூக சேவகி திருமதி தி. பதிமாவதி மற்றும் நயினாதீவைச் சேர்ந்தவர்களான ஓவியர் மு பரமேஸ்வரன் சுதேச வைத்தியர் கே.ரி.சோமசேகரம், சரவணையைச் சேர்ந்த சங்கீத வித்துவான்பே.சந்திரசேகரம் ஆகியோரே கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

(உ-75)

## கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆறுமுக நாவலர் குருபூசையை முன்னிட்டு சைவ பரிபாலனசபையினர் பாடசாலை மாணவரிடையே நடத்தும் கட்டுரைப்போட்டி வரும் மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் நாவலர் குருபூசைத்தினமான டிசம்பர் 6 ஆம் திகதி அன்று நடைபெறும் விழாவில் வழங்கப்படும். உ-2)

## ஓய்வூதியத் திட்டத்தில் மீனவர் இணைவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தம்பாட்டியில் 27 மீனவர்கள், மீனவர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைக் கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி 27 மீனவர்களும் தம்பாட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களாவர். (செ-75)

## படைவீரர்பலி

(கொழும்பு)

வெலிஓயா பராக்கிரமபுரப் பகுதியில கடந்த 15 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கிளைமோர் வெடியில் சிக்கி படை வீரர் ஒருவர் கொல்லப் பட்டுள்ளதாக விசேட ஊடகத்தகவல் மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[செ]

## வீதியால் செல்வோர் சிரமம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்னுள்ள காணியில் கொட்டப்படும். கழிவுகளால் அவ்வீதி வழியாகச் செல்வோர் துர்நாற்றத்தினைச் சகிக்க முடியாத அவஸ்தையுடன் செல்வதைக் காண முடிகிறது.

ஆடு மாடுகளின்எச்சங்களை இக்காணியில் சிலர் வீசுவதாலும்இத் துர்நாற்றம் ஏற்படுவதாகச்சுட்டிக் காட்டப்படுகிறது. (உ-223)

# வீடு சேதமடைந்தவர்களுக்கான கொடுப்பனவு வழங்கல் தாமதம்

## பாதிப்புற்ற மக்கள் பெருந்துயரம்

(நவக்கிரி)

வீடு சேதமடைந்தவர்களுக்கான 25 ஆயிரம்ரூபா கொடுப்பனவு வழங்குவதில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீணான காலதாமதமும் அசிரத்தைப்போக்கும் காட்டப்படுவதாக பாதிக்கப்படும் மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசசெயலர் பிரிவில் சில பகுதிகளுக்கு முதற்கட்டக் கொடுப்பனவான 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் அடுத்தகட்டக் கொடுப்பனவு வழங்கப்படாமையினால் வீட்டுப் புனரமைப்புப் பணியை இடைநடுவில் கைவிட்டு மீதிப்பணம் எப்போதுவரும் எனக் காத்திருப்பதையும்,

கொடுப்பனவு பெறுவதற்கான சகல படிவங்களையும் பூர்த்திசெய்து அனுப்பியும் அது இன்னமும் வழங்கப்படாமையினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அலுவலகத்துக்கு அலைபவர்களையும் அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை, மேற்படி கொடுப்பனவு வழங்கலில் காட்டப்படும் தாமதமானது பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களைப் புண்படுத்தும் செயலாக அமைவதாகப் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர். (உ-233)

## பாவனைப் பொருட்களின் விலைஏற்றம்

யாழ். குடாநாட்டில் அன்றாடபாவனைப் பொருட்களின் விலை கணிசமான அளவில் உயர்ந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் சவற்கார வகைகள், சலவைப் பவுடர், பற்றறி ஆகியவற்றின் விலைகள் அதிகரித்திருப்பதுடன், சில இடங்களில் இவற்றைப் பெறுவது பெரும் பாடாய் இருப்பதாகப் பொதுமக்கள் அலுத்துக் கொள்வதையும் காணமுடிகிறது. (உ-124)

## இராசி பலன்

18-10-2001
(ஐப்பசி 01, வியாழன்)
துதியை மு இ. 10:45 வரை
சுவாதி பி.ப 1:43 வரை
இராகுகாலம் 1 32- 3.02
சுபநேரம் 7.32- 9.02
அமிர்தசித்தம்.

**மேடம்**
காரியம் கைகூடும், நல்லவரவேற்பு, தனவரவு, சுவாரஸ்யம்.

**இடபம்**
சத்துரு ஜெயம், சந்தோசமான சம்பவம், முயற்சி வெற்றி, உடல் நலம்.

**மிதுனம்**
இனசனத்தொடர்பு, குடும்பப் பிரச்சினை, காரியத்தடையூறு. ரோகம்.

**கடகம்**
முயற்சி கைகூடும், பெரியோர் மனஸ்தாபம், அற்பர் உறவு, திடீர் நன்மை.

**சிங்கம்**
தனவரவு, கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, காரியஅனுகூலம்.

**கன்னி**
வாக்குக்கலகம், கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், உஷ்ண வியாதி.

**துலாம்**
போசன சுகம், நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, காரியம் கைகூடும்.

**விருச்சிகம்**
தொழில் நன்மை, காரிய அலைச்சல், சுபசெலவு, திடீர் பயணம்.

**தனுசு**
கௌரவம், பொருள் சேர்க்கை, காரிய அனுகூலம், தெய்வ தரிசனம்.

**மகரம்**
கடினஉழைப்பு, சுகநிகழ்வு, நிலைமாற்றம், தொழிற் சிறப்பு.

**கும்பம்**
கட்டுப்பாடு, உடல்சோர்வு, புதிய தொழிற்சிந்தை, காரிய தாமதம்.

**மீனம்**
வியாதி, போசன சுகம், உறவினர் மனஸ்தாபம், காரியத் தடங்கல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## நவராத்திரிப் பாமாலை



துர்க்கா துதி

### சக்தியின் மகிமை

அன்பும் அருளும் அளித்திடும்
அன்னையே
அவனியில் அமைதி காத்திடும்
அவதாரணியே
நம்பித் தொழும் அடியவரின் நலம்
தந்திடும் நாயகியே
மஹிஷா சுரவர்த்தினியே சரணம் அம்மா
அருளவாய்

க. செந்தில் குமரன்

### அமைதி வேண்டும்

வீரமுடன் கல்வி செல்வம்
வேண்டி நின்றோம் முப்மூன்று நாள்கள்
தாயே; மூன்றொடு நான்காய்
தரவேண்டும் தரணியெங்கும் அமைதி

ந. துஷாந்
சாவ. இந்துக் கல்லூரி

### தமிழனுக்கு,விடிவு கொரு

சிங்க வாகனத்தில் இருக்கும் துர்க்கையே
சிந்தித்துப் பாரம்மா தமிழன் படும் துயர்
ஆனாலும் அவன் வழிபடாமல் இருப்பானா
ஆனவழி காட்டம்மா துர்க்கையே

கஜேந்திரன்
சங்கரத்தை.

### ஒரு மலர் வைத்தேன்

துர்க்கையே ஒருமலர் வைத்தேன்
தூய உள்ளம் பெறுவதற்கு
துர்க்கையே ஒருமலர் வைத்தேன்
துஷ்டர்களை வதைப்பதற்கு
துர்க்கையே ஒரு மலர் வைத்தேன்
துள்ளும் வீரம் கிடைப்பதற்கு
துர்க்கையே ஒருமலர் வைத்தேன்
சுகவாழ்வு பெறுவதற்கு

த. சிவகௌரி
தரம் - 8
மயிலணி சை.ம.வி.

### அருள் தந்திடுவாய்

வீரத்தின் தெய்வம்நீ துர்க்கா தேவி
தீரத்தின் நாயகி நீ மலைமகள் தாயே
சூரத்தனங்கள் எல்லாம் தீர்த்திடுவாய் அம்மா
ஈரத்துடன் அருளை தந்திடுவாய் அம்மா

சிந்துஜா கணேசலிங்கம்
தரம் 10-A
யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை.

வடபிராந்திய மக்கள் வங்கியின் இன்னுமோர்

# மகத்தான சேவை ஆரம்பம்!

அரச கூட்டுத்தாபன ஊழியர்களினதும் பொது மக்களினதும் நலன் கருதி
ஒவ்வொரு சனிக்கிழமையும் யாழ். ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில்

"தங்க நகை அடகு சேவை"

2001-10-20 (சனிக்கிழமை) தொடக்கம் மகத்தான ஆரம்பம்
காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை ஒவ்வொரு
சனிக்கிழமையும் தங்களுக்கான

**விசேட அடகு சேவை**

கருமபீடம் பணிபுரியும்

**வடவலய உதவிப் பொது முகாமையாளர் திரு. சி. இளம்பிறைநாதன்**
**வடபிராந்திய முகாமையாளர் திரு. மு. க. சிவபாதவிருதயர்**
இணைந்து 2001-10-20 காலை 9.30 மணிக்கு விசேட கருமபீடத்தை
ஆரம்பித்து வைப்பார்கள்
அடகு வைத்துப் பணம் பெறும் எமது இனிய வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

பிரதேச தலைமைச் செயலகம்,
79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-2601, 021-2602, 021-2956
தொலைநகல்: 021-2602, 021-2956

(C/2749)

# அடகு வைத்தவர்களுக்கு மீண்டும் ஓர் சந்தர்ப்பம்

1984 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன் வாடிக்கையாளர்கள்
மக்கள் வங்கி யாழ். மாவட்டக் கிளைகளில்
அடகு வைத்த நகைகள் மீண்டும் மீளளிக்கப்படுகின்றன.
எனவே இது வரை தமது சொத்தான நகைகளை மீட்காதவர்கள்
இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முதலளவு வட்டியை
மட்டுமே செலுத்தி மீட்டுக் கொள்ளுங்கள்.

அடகுச் சிட்டை இழந்தவர்கள் 'பத்திரம் ஆ'
சத்தியக் கடதாசி சமர்ப்பித்தும் அடகு வைத்தவர்கள்
மரணமடைந்திருந்தால் 'பத்திரம் அ' அடகு வைத்த
கிளைகளில் சமர்ப்பித்து மீட்டுக் கொள்ளுங்கள்.

குறிப்பு: குறித்த நகைகளை 2001-12-31 ற்கு முன் மீளத் தவறின் மீளப்படாத நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

பிரதேச தலைமைக் காரியாலயம்,
79, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021-2601, 021-2602, 021-2956
தொலைநகல்: 021-2602, 021-2956

(C/2748)

## செய்தி வேளையில் மின்வெட்டு மக்கள்விசனம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் ஒன்றுவிட்ட ஒருநாளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாலை நேர மின்வெட்டுசெய்திஒளிபரப்பு, ஒலிபரப்பு வேளையையொட்டிய நேரங்களில் மேற்கொள்ளப்படுவதால் பொது மக்கள் விசனமடைந்துள்ளனர்.

மாலையில் ரூபவாஹினி செய்திகள், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன செய்திகள் ஒளி, ஒலி பரப்பாகும், 5 30க்கும் 6.00 மணிக்கும் கிடைப்பட்ட நேரங்களில்மின்வெட்டு இடம் பெறுவதால் செய்திச் சேவையை கேட்க, பார்கமுடியாது போகின்றது.

எனவே மின் வழங்குவதில் பொறுப்பாக உள்ளவர்கள் இதைக்கருத்திற் கொண்டு மின் வெட்டும் நேரத்தை சிறிதுதளர்த்தி உதவுவது அவர்களதுசேவையின்பயனை அதிகரிக்கச் செய்யும் என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (செ-59)

## வடமராட்சி கிழக்கில் கஷ்டப்படி கிடைக்காத ஆசிரியர்கள் கவலை

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்குப் பகுதிகளான அம்பன், குடத்தனை, மணற்காடு ஆகிய பிரதேசங்களில் இடம்பெயராது இயங்கும் ஐந்து பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இதுவரைக்கும் கஷ்டப்படி எதுவும் வழங்கப்படவில்லை என அப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிப்பாடசாலைகளுக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதியும் இல்லாதததனால் ஆசிரியர்கள்மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பாடசாலைகளுக்குச் சென்று வருகின்றனர்.

இவ்வாறு சுமார் ஐம்பது ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணியை மேற் கொண்டுவருகின்றனர்.

மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, குடத்தனை றோ.க.த.க பாடசாலை ஆகியன மிகுந்த கஷ்ரப் பிரதேசப் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (செ-42)

## சிறுவர் முதியோர் தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சிறுவர், முதியோர் தினக் கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரங்கள் வருமாறு;

**கீழ்ப்பிரிவு**

1ம் இடம்- மு. மேனகா (உயரப்புலம் மெ. மி. த. க பாடசாலை)

2ம் இடம்; ஆ. சுபகா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

3ம் இடம்; ச. நிரோஜன் (நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்)

**மத்திய பிரிவு**

1ம் இடம்; தே. சஞ்சீவன் (யாழ் இந்துக் கல்லூரி)

2ம் இடம்; ம. யாமினி (கனகரத்தினம் ம. ம. வி)

3ம் இடம்; ச. தஜீவன் (திருநெல்வேலி முததுத்தம்பி ம. வி.)

**மேற் பிரிவு**

1ம இடம; கு. குருபரன் (யாழ் இந்துக் கல்லூரி)

2ம் இடம; இ. கவிதா (யாழ். இந்துமகளிர்கல்லூரி)

3ம் இடம்; த. மோகனதீபன் (கொக்குவில் ஞான பண்டிதர் வித்தியாலயம)

**உயர் பிரிவு**

1ம் இடம; தர்ப்பனா (யாழ். இந்துமகளிர்கல்லூரி)

2ம் இடம: ம. துஸ்யந்தன் (யாழ். இந்துக் கலலூரி)

3ம் இடம்; தமிழினி (பெரியபுலம் மகா வித்தியாலயம்) (செ- 9, 19)

## விஷச் சாராயம் அருந்திய 15 பேர் மரணம்

(புதுடில்லி)

புதுடில்லியில் விஷச்சாராசாராயத்தை அருந்தியவர்களே இந்த நிலைக்குள்ளா

# செய்தித் துளிகள்

## மிதிவெடியில் சிக்கி மாடுகாலிழப்பு

(யாழ்ப்பாணம்)

வயல் வெளியில் மேய்ந்துகொண்டிருந்த மாடு ஒன்று மீதிவெடியில் சிக்கிஒருகாலை இழந்துள்ளது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் கோப்பாய் பகுதியில் இடம் பெற்றுள்ளது. (செ-9)

## வீட்டில் திருட்டு

(புத்தூர்)

சிறுப்பிட்டி தெற்குப்பகுதியில் சென்ற சனிக்கிழமை இரவு வேளையில் வீடொன்றில்புகுந்த திருடர்கள் பெறுமதிமிக்க பலபொருட்களைத் திருடிச்சென்றுள்ளனர்.

இதற்குமுன்பு இப்பகுதியில் அண்மையில் ஒருதிருட்டு நடைபெற்றது என்பதுகுறிப்பிடத்தக்கது. (எ-235)

## பொதுக் கூட்டம்

(மானிப்பாய்)

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம் பெறும். (செ-120)

## முதியோர் தின விழா

(கோப்பாய்)

வலி- கிழக்கு பிரதேசசெயலக முதியோர் தினவிழா நாளை பி.ப 2.00 மணிக்கு பிரதேச செயலக மகா நாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திரு க கேதிஸ்வரர் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பிரதிப் பதிவாளர் கவிஞர் கலாநிதி இ முருகையனும சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜாவும், கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞான சுந்தரமும் கலந்து கொளவார்கள். (எ-79)

## பழிக்குப் பழி

(சாவகச்சேரி)

திருட்டில் ஈடுபட்ட சமயம் ஊரவர்களின் கைகளில் மாட்டுப்பட்டு அவர்களின் தாக்குதலுக்கு உள்ளானவர் தன்னைத் தாக்கியவர்களில் ஒருவரைப் பழிவாங்கினார்.

இச்சம்பவம் அண்மையில் நெல்லியடியில் இடம் பெற்றது. மீசாலை மேற்கில் இருவர் நாகராசா என்பவரது வீட்டில் எடுத்த இரு நெல் மூட்டைகளை சைக்கிளில் கொண்டுவந்த போது அவர்களின் களவு பொதுமக்கள் சிலர் முன்பு அம்பலமாகியது. எனவே ஆத்திரங்கொண்ட பொதுமக்கள் அவர்களைக் கடுமையாக தாக்கிய பின் எச்சரித்து போகவிட்டனர்.

இவ்வாறு தாக்கப்பட்டவர்களில் ஒருவர் தன்னைதித் தாக்கிய கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரை வேறொரு நாள் நெலலியடியில் சந்தித்த போது அவரை தாக்கியதோடு. அவரது சைக்கிளையும் பறித்துச் சென்றுள்ளார். (எ-21)

## விரைவில் கொடுப்பனவு

(மானிப்பாய்)

வடக்கின் இளைஞர் யுவதிகளுக்கு தொழுற பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் இரண்டாவது பிரிவாகத் தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு விரைவ்ல் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் அவ்வப் பிரதேச செயலகங்களில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-252)

## புகையிலைச் செய்கையில் நாட்டம்

(வேலணைபுததுறை)

அனலைதீவு மறறும புங்குடுதீவுப பகுதி விவசாயிகள் புகையிலை, நெல் பயிர்ச் செய்கைககு தயாராகி வருவதைக் காணககூடியதாகவுள்ளது.

பருவகால மழை ஆரம்பமாவதையடுத்து வயல்களை உழுது தயார்பபடுத்தும நடவடிக்கைகளில் இவர்கள ஈடுபட்டுளளதையும காணக் கூடியதாகவுளளது. (உ-2.3)

## படையினா அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்குப்பகுதியில் சமீபகாலங்களில் இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவங்களையடுத்து இப்பகுதிகளில் படையினர்மிதி வெடிசம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்கிவருகின்றனர்.

அத்துடன் மிதிவெடிகள் மறைந்து கிடக்கக்கூடும் என சந்தேகிக்கும்இடங்களில் அபாயஅறிவிப்பு பலகைகளை நாட்டி வருகின்றதையும் அவதானிக்கமுடிகின்றது. (செ-19)

## விவசாயக் குழுக் கூட்டம்

[மானிப்பாய்]

சண்டிலிப்பாய் பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் நாளை வெளளிக்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். [செ-120]

## வாணிவிழா

(கொழும்புத்துறை)

நல்லூா இளங்கலைஞர் மன்றத்தினரின் வாணி விழா எதிர்வரும 20-ஆம் 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இருநாட்களும் மங்கள இசை, இன்னிசைக்கச்சேரி, வாத்திய பிருந்தா, நடன அர்ப்பணம ஆகிய கலை நிகழ்ச்சிகள இடம பெறவுள்ளன. [செ-223]

## நல்லின மாடுகள் விரைவில் வரும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிசினைப்படுத்தும் நிலையத்திற்குவிரைவில் நல்லினமாடுகள்வரவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது சினைப்படுத்தலை விரை

## துண்டுப் பிரசுரம் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

(புதுடில்லி)

புதுடில்லியில் விஷச்சாராயம் அருந்திய 15 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் கவலைக்கிடமான நிலையில் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தலைநகரின் புறத்தேஉள்ள பருடாவில் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட விஷச்சாராயத்தை அருந்தியவர்களே இந்த நிலைக்குள்ளானார்கள்.

இதேவேளை, விஷச்சாராயத்தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# இரவு விருந்தில் இளவரசர் சார்ல்ஸுடன் பின்லேடனின் உறவினர்

(லண்டன்)

அமெரிக்க நகரங்கள் தாக்கப்பட்ட இருவாரங்களுக்குப் பின் ஒஸாமா பின்லேடனின் உறவினர் ஒருவருடன் பிரித்தானியாவின் முடிக்குரியஇளவரசர்சார்ள்ஸ்இரவு விருந்து உண்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த பிரபல வர்த்தகரும், பின்லேடனின் சொந்தக்காரருமான பக்கீர் பின்லேடனுடன் இளவரசர் சார்ள்ஸ் இஸ்லாம் மதம்குறித்து கலந்துரையாடும் பொருட்டு சந்தித்தார்.

அச்சந்திப்பு இங்கிலாந்தின் மத்திய பகுதியிலுள்ள ஒக்ஸ்வோர்ட் இஸ்லாமிய கல்வி நிலையத்தில் நிகழ்ந்தது. அங்குதான் அவர் பக்கீர் பின்லேடனுடன் விருந்திலே கலந்துகொண்டார்.

பக்கீர் பின்லேடனுடன் சார்ள்ஸ் ஸும் அங்கு சந்திப்பதற்கான ஏற்பாடுகள் அமெரிக்க நகரங்கள் தாக்கப்படுவதற்கு ஒருமாதத்திற்கு முன்பே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இத்தகவல்களை லண்டனில்உள்ள இளவரசர் சார்ள்ஸின் உத்தியோகபூர்வ அலுவலகமானசென்ற் ஜேம்ஸ்மாளிகையின்பேச்சாளரான பெண் தெரிவித்துள்ளார். (எ)

நல்லினமாடுகள்வரவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சினைப்படுத்தலை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சினால் நல்லின மாடுகள் வழங்கப்படவுள்ளன அம்மாடுகள் இப்போது கொழும்பில் நிற்கின்றன என்றும் இவ்வருட இறுதிக்குள் இங்குகொண்டுவரப்படும் எனவும் தெரியவருகிறது. (19,

# மாடுகளுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில், மழை காலத்தில் மாடுகளிற்கு ஏற்படும் தொண்டைநோய்த் தடுப்பூசி போடப்படும் விபரம் வருமாறு:

இன்று வியாழக்கிழமை ஜே/ 261, 262 கோப்பாய் மத்தி, வடக்கு பிரிவுகளுக்கு கந்தசாமி கோவிலடியிலும், ஜே- 265, 266 உரும்பிராய் தெற்கு, கிழக்கு பிரிவுகளுக்கு காலை செல்லப்பா ச. ச. நிலையத்திலும், மாலைஞான வைரவர் கோவிலடியிலும், நாளை வெள்ளிக்கிழமை ஜே- 263, 264 உரும்பிராய் மேற்கு, வடக்கு பிரிவுகளுக்கு கணேஷா ச. ச. நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும். (செ)

# விநியோகம்

[யாழ்ப்பாணம்]

அண்மையில் சுன்னாகம் பகுதியில் படையினர் துண்டுப்பிரசுரத்தினை மக்களுக்கு விநியோகித்தனர். அன்பார்ந்த யாழ்மக்களே! நீங்களும் இவ்வாறு பணம் செலுத்துகின்றீர்களா? என்ற தலையங்கமிட்ட இத் துண்டுப்பிரசுரத்தில் அமைதியான சுற்றாடலை உருவாக்க பாதுகாப்புபடையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரப்பட்டுளளது. [உ-2]

# பரிசுத்தினம்

(கோப்பாய்)

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பௌதீகவள அங்குரார்ப்பண வைபவமும் பரிசுத் தினமும்நாளை மறுதினம் சனிக்கிழமை 1. 30 மணிக்கு அதிபர் தி. சோமசேகரத்தின் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறைதலைவர் பேராசிரியர் க.சின்னத்தம்பி, கோப்பாய் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ சிவஞானசுந்தரம் வே. சந்திரசேகரம் பிள்ளை இ. பாலசுப்பிரமணியம் ஆகியோர்கலந்து சிறப்பிப்பார்கள். (எ-79)

# வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம)

வட மாகாண புற்று நோய் எயிடஸ் தடுபபுச்சங்கததின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் 20ம் திகதி சனிக்கிழமைகாலை 10.30மணிககு சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தலைமையில் பிரதான வீதியில் அமைந்துளள பிலிப் வைத்தியசாலை அலுவலகத்தில் நடைபெறவுளளது.

செ-104)

# சைக்கிள் தரிப்பிடம் திறப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கலலூரியில ஆசிரியர் தின விழாவும, சைககிள் தரிப்பிட நிலையம் திறபபுவிழாவும் கடந்த திஙகடகிழமை கல்லூரி அதிபர் அருட்சகோதரி மேரி றொசாரியோ தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் வலி கிழககுப் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

(உ-218)

### 2010 ஆம் ஆண்டிற்குள்

# தென் ஆபிரிக்காவில் 7 மில்லியன் மக்கள் எயிட்ஸ்நோயால் பலியாவர்

## மருத்துவ ஆராய்ச்சி நிலையம் திடுக்கிடும் தகவல்

(பிறிடோறியா)

தென்னாபிரிக்காவில் 2010 ஆம் ஆண்டுக்குள் 5-7 மில்லியன் மக்கள் எயிட்ஸ் பாலியல் நோயினால் கொல்லப் படக் கூடும் என்ற திடுக்கிடும் தகவலை அந்த நாட்டின் தலையாய மருத்துவ ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டுள்ளது.

அரசாங்க நிதியுதவியுடன் இயங்கிவரும் இந்த மருத்துவ ஆராய்ச்சி நிலைய அறிக்கைப் படி தற்பொழுது தென்னாபிரிக்காவில் நாற்பதிதைந்து சதவீதமானவர்கள் எச். ஐ. வி. பாலியல் நோயினாலேயே பலியாகின்றார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தென்னாபிரிக்க அரசாங்கம் இந்த அறிக்கையை நிராகரிப்பதுடன் இதில் எந்த விதமான உண்மையும் இல்லை என்று அதற்கு மறுப்பறிக்கையும் வெளியிட்டுள்ளது.

ஆனாலும் எச். ஐ. வி. பாலியல் நோய்தொடர்பான தாக்கம் குறித்து மிகவும் ஆதாரபூர்வமான கருத்தை இம் மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ளது என பல நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-7)

### பயங்கரவாத

# தடைச் சட்டம் கனடாவிலும் அமுல்

(ஒட்டாவா)

கனேடிய அரசாங்கம் பயங்கரவாதத்தடைச் சட்டத்தை அமுல் செய்துள்ளது.

நேற்று முன்தினம் நடாளுமன்றத்தில் இச் சட்டத்தைச் சமர்ப்பித்து நீதி அமைச்சர் டக்ளஸ் பேசுகையில்;

இச்சட்டம் கனேடியப் பொலிஸாருக்கு விசேட அதிகாரங்கள் வழங்குவதாயும், பயங்கரவாதிகளுக்கும் தண்டனை விதிக்கும் வகையிலும் அமைகிறது என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்; ஏற்கனவே உள்ள கொலைக் குற்றச்சாட்டு பணப்பரிமாற்றுச் சட்டம் உத்தியோக பூர்வ ரகசியச் சட்டம் என்பனவற்றை திருத்தும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று தெரிவித்தார்.

இதே வேளை, இச் சட்டத்தின் படி பயங்கரவாதிகளுக்கு ஆயுள் காலச் சிறைத்தண்டனை விதிக்கப்படுமென்றும் தெரிவித்தார். (து)

### அமெரிக்க-இந்திய

# வெளியுறவு அமைச்சர்களின் பேச்சில் இணக்கம் காணப்பட்டது

(புதுடில்லி)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலுக்கும் இந்திய வெளியுறவு அமைச்சா ஜஸ்வந்சிங்கிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகள் மிக இணக்கமாக நடைபெற்றதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் பாகிஸ்தான் இஸ்லாமாபாத்திலிருந்து புதுடில்லி வந்துசேர்ந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்குடன்பேச்சுவார்த்தை நடத்தினார்.

அவர்களின் பேச்சினிடையே ஜம்முகாஷ்மீரின் பயங்கரவாதம் பற்றியும் ஆப்கானிஸ்தான் நிலைமை பற்றியும் விவாதங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இதே வேளை, தலிபான் அரசு கவிழ்ந்த பின் அமையப் போகும் அரசு பற்றியும் பேசியிருக்கிறார்கள்.

இதற்கிடையில்காஷ்மீர் விவகாரத்தில் மூன்றாந்தரப்புக்கு இடமில்லையென்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தியிருப்பதாக அமைச்சுச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க அமைச்சர் கொலின் பவல் நேற்று இந்திய பிரதமர் வாஜ்பாயையும் மற்றும் அரச உயர் அதிகாரிகளையும்சந்தித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# அமெரிக்க நகர் தாக்குதலுக்கு ஆசிய பசுபிக் நாடுகள் கண்டனம்

(ஷங்காய்)

ஆசிய பசுபிக் நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் அமெரிக்க வர்த்தக மையம் பென்டகன் தாக்கப்பட்டதற்குகண்டனத் தீர்மானம் இயற்றப்படும்.

இதுதொடர்பாக ஆசிய பசுபிக் 21 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஷங்காயில் இதுபற்றிக் கூடி ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தில் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி வழங்குவதோ ஆதரிப்பதோ தடைசெய்யப்படவேண்டும் என்று தெரிவிக்கப்படும்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தசனி, ஞாயிறு நாட்களில் ஷங்காயில் ஆசிய பசுபிக் நாடுகளின் தலைவர்கள் கூடி இதற்கான தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கூட்டத்தில் குறிப்பாக அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தோனேஷியா போன்ற நாடுகள் கலந்துகொள்ள இருப்பதுகுறிப்பிடத்தக்கது. (து)

## உலக தரிசனம்

### முன்னாள்

# ஜனாதிபதியின் மனைவியை கைது செய்யுமாறு

## நீதிமன்றம் உத்தரவு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் அதிபரின் மனைவி திருமதி இமல்டா மார்க்கோஸை கைது செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊழல் ஒழிப்பு நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருமதி இமல்டா மார்கோஷ்தன்மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகளை மறுத்திருக்கிறார். இதேவேளை தனது கணவர் இறந்து 16 ஆண்டுகளாக தான் அரசால் துன்புறுத்தப்பட்டுக் கொண்டுவருவதாகவும் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் முன்னைய அதிபர் பேடினன்ட்மார்கோஸ் 1986 வரை சட்டவிரோதமாகச் சொத்துச் சேர்த்தார் என்றும், கிட்டத்தட்ட 500 கோடி டொலர் பெறுமதியான சொத்துக்களை மனைவி இமல்டா சுருட்டிக்கொண்டார்என்றும் ஊழல் ஒழிப்பு நீதிமன்றத்தில் வழக்குகள் போடப்பட்டிருந்தும இற்றைவரை தண்டிக்கப்படவில்லை யென்று தெரிவிக்கப்படுகிறது. [து]

# தென்னாபிரிக்க அணி வெற்றி

(டர்பன்)

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் பங்குபெறும முக்கோண கிரிக்கெட்போட்டியில்கடந்த செவ்வாய் அன்று இடம் பெற்ற போட்டியில்தென்னாபிரிக்க அணி கென்யா

# உலக நாடுகளிலும் அந்திராக்ஸ் நோய் பரவக் கூடிய அபாயம்

## சர்வதேச அமைப்புகள் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அமெரிக்காவை பெரும் பரபரப்பில் ஆழ்த்திவரும் அந்திராக்ஸ் நோய் காரணமாக உலக நாடுகள் அனைத்தும் மிக விழிப்பாக இருக்க வேண்டும் என சர்வதேச அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

கால் நடைகளுக்குப்பரவும் மிகக் கொடிய அந்திராக்ஸ் நோய் மனிதருக்குத்தொற்றி வரும் காரணத்தினால் சகல நாட்டு விமான நிலையங்கள் மற்றும் பயணிகள் நிலையங்களிலும் அதிதீவிரமாகபயணிகள் சோதனையிடப்பட்டு வருகின்றனர்.

மேலும் அமெரிக்காவிலிருந்து வேறு நாடுகளுக்குச் செல்வோர்மருத்து வரீதியாக பரிசோதிக்கப்பட்டு எவ்வித தொற்று நோயும் இல்லை என்ற மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே பயணம் செய்ய அனுமதிக்கப் படுகின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கனடாவிலும் முதன் முதலாக ஒருவருக்கு அந்திரரக்ஸ் நோய் தொற்றியிருப்பதாக தெரிய வருகிறது.

கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அந்திராக்ஸ் நோய் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப் படுவதுடன், விளம்பரங்கள், சுவரொட்டிகள் மூலமும் மக்களுக்கு இந்நோய் பற்றி எச்சரிக்கைவிடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-7)

பெற்ற போட்டியில்தென்னாபிரிக்க அணி கென்யா அணியை 9 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 229 ஓட்டங்களைப் பெற்றது. பதிலிற்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 41.1 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது தென்னாபிரிக்க அணி சார்பாகலான்ஸ் குளூஸ்னர் 75 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(செ-2)

கப்படுகிறது. [து] நாட்டு விமான நிலையங்கள்

# இஸ்ரேல் தரப்பினருக்கு தலைமை வகிக்க தயார்

## ஏரியல் ஷரோன்

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலுக்கும் பேச்சுவார்த்தை இடம்பெறுமானால் இஸ்ரேல் தரப்பினருக்கு தலைமை வகிக்க தான் தயாராகவுள்ளதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன்தெரிவித்துள்ளார்.

மேலும் இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க பலஸ்தீன் முன்வந்தால் பலஸ்தீனத்தைஒருதனி இராச்சியமாக பிரகடனப் படுத்தவும் தாம் தயாராகவுள்ளதாகவும் ஷரோன் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் இரு தரப்பினரும் தீர்க்கமான உடன்பாட்டிற்கு வரும்பட்சத்தில் அதனை ஏற்பதாகவும் அதுவே சிறந்த வழியாகும் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பலஸ்தீன இராச்சியம் உருவாவது தவிர்க்க முடியாத ஒன்று என்று ஜோர்தான் மன்னர் அப்துல்லா பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரிடம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மத்திய கிழக்கின் ஸ்திரத் தன்மையைத் தோற்றுவிப்பதற்கு இதுவே சிறந்தவழிஎன்றும் அப்துல்லா தெரிவித்துள்ளார். (செ-7)

# இந்தியாவிடயத்தில் அமெரி. தலையீடு அவசியமற்றது

(புதுடில்லி)

பாகிஸ்தானுடனான இந்திய உறவுகளில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டிய அவசியம் அமெரிக்காவிற்கு இல்லை என இந்தியா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் -இந்தியாவிற்கு இடையே காணப்படும் பதற்ற நிலையைக் குறைக்க அமெரிக்க வெளியுறவுஅமைச்சர்கொலின் பவல் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டதுடன் தற்போது இந்தியா சென்றுள்ள இவ்வேளையிலே இந்திய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் நிருபாமா சாவ் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

மேலும், அவர் பேசுகையில்; பாகிஸ்தானுடனான உறவு பற்றி இந்தியா-பாகிஸ்தானுடனே நேரில் பேசும் என்றும் இந்தியாவின் இந்நிலை பற்றி அமெரிக்கா ஏற்கனவே அறிந்திருப்பதாகவும் தெரிவித்துளளார்.

(உ-2)

# பலஸ்தீன தனிநாடு உருவாக பிரிட்டிஷ் பிரதமர் உடன்பாடு

(லண்டன்)

பலஸ்தீன தனி நாடு உருவாகுவதை பிரிட்டன் வரவேற்பதாக பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை, தேக்கமடைந்திருக்கும் மத்திய கிழக்குப் பேச்சு வார்த்தை மீண்டும் தொடர வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

பிரிட்டன் வந்திருந்த பலஸ்தீன அதிபர் யஸீர் அராபாத்துடன் பேச்சு நடத்திய பின், செய்தியாளர் மத்தியில் பேசும் போது,

ஏற்கனவே இஸ்ரேல் பலஸ்தீனப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட ஒரு பகுதித் தீர்வின் படி பலஸ்தீன நாடு உருவாக்கப்படுவதே சிறந்தது என்றார்.

பலஸ்தீனம் தனி நாடானால் இஸ்ரேலுக்கு பாதுகாப்பும் சமாதானமும்,கிடைக்கும் என்று ரொனிபிளேயர் தெரிவித்தார்.

(து)

# தலிபான் அரசு விரைவில் கவிழும்

(நியூ ஜோர்க்)

ஆப்கானிஸ்தானில்தலிபான் அரசு கவிழப் போவதாக அமெரிக்கஇராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்குப் புறப்பட முன் அமெரிக்க விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கொலின் பவல்; தலிபான் அரசு கவிழப் போவதால் அங்கு புதிய அரசு ஒன்று அமைக்கப்பட இருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபை அதற்கான முயற்சிகளில் இறங்குவதற்கு ஏதுவாக ஒருங்கிணைப்பாளரை அமெரிக்கா ஐ நா:விடம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

(து)

## இன்று ஒரு தகவல்

# கைரேகை மருத்துவம்

ஒருவர் ஒரு ''லாட்டரி சீட்டு வாங்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதை வாங்குவதற்கு முன்னர் நமது அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்வோம் என்று நினைத்தார். அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே நடந்தார். வழியில் கைரேகை ஜோசியர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரிடம் கொண்டுபோய் கையை நீட்டினார். அதிர்ஷ்டம் எப்படி இருக்கிறதென்று பார்த்துச் சொல்லுங்களென்றார். அதிர்ஷ்டம் பிரமாதமாக இருக்கிறது, நீங்கள் மிகவும் உயர்ந்தஇடத்துக்குப் போகப் போகிறீர்கள் என்றார் ஜோசியர். அதைக்கேட்டதும் இவருக்கு மிகவும் சந்தோஷம். உற்சாகத்தோடு ஓடிப்போய் ஒரு ''லாட்டரி சீட்டு'' வாங்கிக்கொண்டு போனார்.

கொஞ்சநாள் கழித்து வழியில் அவரைக் கண்டேன். என்ன சார் பரிசு விழுந்ததா? அவர் சொன்னது பலித்ததா? என்று கேட்டேன். ''பரிசு விழவில்லை ஆனால் அவர் சொன்னது பலித்தது'' என்றார். அது எப்படி என்றேன். பரிசு விழுந்திருக்கிறதா என்று பார்ப்பதற்காக பத்திரிகை வாங்குவதற்காக மிகவும் அவசரமாக ஓடினேன். பரிசு விழவில்லை நான்தான் அதற்குப் பதிலாக தவறிப்போய் பள்ளத்தில் விழுந்துவிட்டேன். எலும்பு முறிவு இவ்வளவு நாளும் ஆஸ்பத்திரியில் தான் இருந்தேன். ஆஸ்பத்திரியில் மேல்மாடியில் இருந்தேன். அதைத்தான் அந்த ஆள் உயர்ந்த இடத்துக்கு போகப் போகிறேன் என்று சொல்லியிருப்பார் போல் இருக்கிறது'' என்றார்.

கைரேகை அதிர்ஷ்டத்தை கண்டு பிடிக்கிறதோ இல்லையோ-வயிற்றில் வளர்கிற குழந்தை எப்படி என்பதை அது கண்டுபிடித்து விடுகிறது. அதுதான் கைரேகை மருத்துவம். ஒரு குழந்தை பிறக்கிறதற்கு முன்னர் அதைப்பற்றிய சில இரகசியங்களை அதனுடைய அப்பா-அம்மா கையைப் பார்த்து கண்டுபிடித்து விடுகிறார்களாம். மேற்கு ஜேர்மனியில் சில மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் ஒரு கம்பியூட்டர் புறோகிராம் உருவாக்கியிருக்கிறார்கள்.

அது பெற்றோர்களுடைய கைரேகையைஅலசிஆராய்ந்து குழந்தை பிறக்கிறதில் ஏதாவது பிரச்சினை இருக்குமா என்பதை முன்கூட்டியேகண்டு பிடித்துச் சொல்லிவிடுகிறது. பொதுவாக உள்ள பத்து வகையான வம்சாவளிக் கோளாறுகளை இதன்மூலமாகக் கண்டுபிடித்துவிடலாம். மொங்கோலிசம் என்பது ஒரு வகையான மனக்கோளாறு. மனவளர்ச்சி குன்றிப்போய் விடுகிறது. சாதாரணமாக ஆயிரத்தில் ஒரு குழந்தை இப்படிப் பிறப்பது உண்டு. இப்படி இந்த மொங்கோலிசம் உள்ள குழந்தைகளுடைய உள்ளங்கையில் பார்த்தால் அதில் சில குறிப்பிட்ட சுழிகள் இருக்கும். இது விஞ்ஞானிகளுக்கு ஏற்கனவே தெரிந்த ஒரு விஷயம். இப்போதுஎன்ன செய்கிறார்களென்றால் பெற்றோர் கைரேகையையும், பிள்ளைகளின் கைரேகையையும் ஒப்பிட்டுப் பார்த்து அதில் ஏதாவது சம்பந்தம் தெரிகிறதா என்று பார்க்கிறார்கள். அப்படிப் பார்க்கிறபோது சில விஷயங்கள் தெரியவருகிறது.

1980 ல் மரபியல் வல்லுநர்கள் ஒரு விஷயத்தைக் கவனித்தார்கள். மனவளர்ச்சி குறைந்த குழந்தைகளுடைய பெற்றோர்களில் ஒரு 12%-தாய், ஒருசில தந்தை போன்றோர் நல்ல உடல் நலத்தோடு இருந்தாற்கூட பிள்ளைக்கு இருக்கிற சில மேனி வேறுபாடுகள் இவர்களுக்கும் இருக்கிறது. மேற்கு ஜேர்மனியில் இந்த ஆராய்ச்சியில் இன்னும் ஒருபடி முன்னேறியிருக்கிறார்கள். கையிலுள்ள கிட்டத்தட்ட 50 துல்லியமான அறிகுறிகளை பட்டியல் போட்டிருக்கிறார்கள். துல்லியமான சிலவற்றை வெறுங் கண்ணால் பார்க்க முடியாது லென்ஸ் மூலமாகத்தான் பார்க்கமுடியும். ஆனால் கம்பியூட்டர் மூலமாக அந்தக் கைஅச்சை ஆயிரக்கணக்கான மற்ற கைஅச்சுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். உடனே ஒரு முடிவுக்கு வந்து விடலாம். மொல்கோலிசம் மட்டுமல்ல, மரபியல் குறைபாடுகளையும் கண்டுபிடிக்கலாம். குழந்தை குள்ளமாக இருந்தாற்கூட கண்டுபிடித்து விடலாம்.

அதனால் பிறக்கப்போகிற குழந்தையுடைய மனவளர்ச்சி, உடல்வளர்ச்சி சரியாக இருக்காது என்கிற இரகசியம் அப்பா-அம்மா கைரேகையிலேயே இருக்கிறது. அப்படி இருந்தால் முன்கூட்டியே பாதுகாப்பாகக் கருச்சிதைவு செய்துகொள்ளலாம். அவலமான ஒரு உலக வாழ்க்கையை அனாவசியமாக ஓர் உயிருக்கு ஏன் கொடுக்கவேண்டும்?

மனவளர்ச்சி குன்றிப் போவது ஒருபக்கம் இருந்தாலும் இந்தக்காலத்துக் குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சிஅளவுக்கு அதிகமாக இருக்கிறது. அதுதான் பிரச்சினை என்று ஒரு அப்பா சொன்னார். அதுஎப்படி என்றேன். அவர் தன்னுடைய பிள்ளையைப்பற்றி விபரமாகச்சொன்னார். ஏன்அப்பா? அப்பாசொல்வதைத்தான் பிள்ளைகள் கேட்கவேண்டுமா? பிள்ளைகள் சொல்லுவதை அப்பாக்கள் கேட்கக்கூடாதா? என்று அவன் கேட்டானாம்.

அப்படிஇல்லை. பிள்ளைகளைவிட அப்பாக்களுக்கு அறிவும், அனுபவமும் அதிகம் என்றார் அப்பா. அப்படியா? என்றான். 'ஆமாம்' என்றார். 'சரி! ரேடியோவைக் கண்டுபிடித்தது யார்? என்றான். 'மார்க்கோனி' என்றார்' அதைஏன் அவருடைய அப்பா கண்டுபிடிக்கவில்லை? என்றான் பையன்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

## தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பவிழா

(மானிப்பாய்)

வலி,கிழக்குப் பிரதேசசபையின் உருக்பிராய் உப அலுவலகம் நடத்தும்தையல்பயிற்சி வகுப்பின் ஆரம்பவிழா இன்று மு.ப.10.00 மணிக்கு வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் தலைமையில்நடைபெறவுள்ளது.

(செ-232)

## அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சாந்தை, பண்டத்தரிப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த சீதை பொன்னன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

(செ)

# டிசம்பர் மாத விடுமுறைக்கு முன்னர் பாட புத்தகங்களை வழங்கவேண்டும்

## கல்வி அமைச்சர் பணிப்புரை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்திற்கான பாடப்புத்தகங்களை எதிர்வரும் டிசம்பர் மாத விடுமுறைக் கிடையில் வழங்குமாறு கல்வி அமைச்சர் கலாநிதி சரத்அமுனுகம சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்புத்தகங்கள் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி வலயப் பணிப்பாளர்களிடம் வழங்கப்பட வேண்டும் என்றும் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான பாடப்புத்தகங்கள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் அனுப்பிவைக்கப்பட்டு, பின்னர் கல்வி வலயப் பணிப்பாளர்கள் ஊடாக அதிபர்களுக்கு வழங்கப்படும்.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

எதிர்வரும் டிசம்பர் மாத விடுமுறைக்கு முன்னர் பாடப் புத்தகங்களை வழங்கினால் விடுமுறை நாட்களில் மாணவர்கள் படித்துப் பயன் பெற முடியும். இதனால் மாணவர்கள் விடுமுறையைக்கூட பயனுள்ளதாகக்கழிப்பர்.

பாடப் புத்தகம் வாங்குவதில் கடந்த காலங்களில் கால தாமதம் நிலவியதைப் போல இம் முறையும் நிலவுவதை தடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும். அப்படி இருந்தும் தாமதம் நிலவுமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும். அப்படி இருந்தும் தாமதம் நிலவுமானால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனங் காணப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவர்.

விடுமுறைக்கு முன்னர் பாடப் புத்தகங்கள் கிடைக்கப் பெறாவிட்டால் பாடசாலை அதிபர்கள் கல்வி அமைச்சுக்கு அறியத்தரும்படி வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார்.

இதேவேளை டுமுறைகளில் வழங்கப்பட்ட புத்தகத்தின் பயனை கண்டறிய அடுத்த ஜனவரி ஆரம்பத்தில் மாணவர்க்கிடையில் பரீட்சைப் போட்டிகள் நடத்தலாம் என்றும் கல்வி அமைச்சின் ஊடாக வெளிவந்த இன்னொரு செய்தி தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

(செ-7)

## வவுனியா வளாகத்தில் பொறியியல் பீடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2003ஆம் ஆண்டில் இப் பீடத்திற்கான முதலாவது மாணவர் தொகுதி சேர்த்துக் கொள்ளப்படுவர்.

அமைச்சர்கே.என். டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைகளுக்கு வழங்கிய சிபார்சுகளையடுத்தே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ

## திருடப் போய் நள்ளிரவில் நீர் இறைக்கும் இயந்திரம் இயக்கிய திருடர்

(துன்னாலை)

இரவுவேளை வீடொன்றினுள் நுழைந்த திருடர் கோஷ்டி அவ்வீட்டுமின்சாரத்தைத் தடைசெய்யும் பொருட்டு பிரதான மின் ஆளியை தடை செய்வதாக எண்ணிக் கொண்டு தவறுதலாக நீர் இறைக்கும் இயந்திர ஆளியை போட்டதனால் சத்தம் கேட்டு விழித்த வீட்டுக்காரரர் கள்வரை கண்டு கூக்குரலிட்டனர்.

இதனால் தப்பினோம் பிழைத்தோம் என கள்வர் ஓடித் தப்பிவிட்டனர்.

இச்சம்பவம் அண்மையில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

(செ-41)

## க. பொ. த. (சா/த) மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்பு

(கொழும்புத்துறை)

இவ் வருடம் க. பொ. த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளமாணவர்களுக்கான, சைவ பரிபாலன சபையின் சைவ இளைஞர் நற்பணி மன்றத்தால் நடத்தப்படும் வழிகாட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் இன்று தமது பெயர் விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு மேற்படி மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (செ-223)

## செடெக் நிறுவன பிரதிநிதிகள் வலிகாமம், வடமராட்சி பகுதிகளுக்கு விஜயம்

(வல்வெட்டித்துறை)

யாழ். வருகை தந்துள்ள செடெக் நிறுவனப் பிரதிநிதிகள் இன்றைய தினம் பல்வேறு பகுதிகளிலுமுள்ள யாழ். கியூடெக் உயிர்ப்பூட்டல் குழுக்களுடனும் நேரில் சென்று கலந்துரையாடவுள்ளனர்.

இந்தவகையில் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ளபொலிகண்டி, இராஜகிராமம், கன்பொல்லை, பருத்தித்துறை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உயிர்ப்பூட்டல் குழுக்களையும்,

வலிகாமம் பிரதேசத்திலுள்ள தெல்லிப்பழை, அளவெட்டி, இளவாலை, பெரியவிளான் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உயிர்பூட்டல் குழுக்களையும் சந்திக்கவுள்ளனர்.

இவைதவிர கடற்றொழிலாளர் சங்கம், விவசாயிகள் சங்கம், இளைஞர் உயிர்பூட்டல் குழுக்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்வதுடன்.

அவர்களுடைய தேவைகள் மற்றும் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

(உ-217)

## நியமனம் கிடைக்கும்வரை ரூபா மூவாயிரம் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக பணியாற்றும் சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

நிரந்தர நியமனம் கிடைக்காது 250 பேர் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுகின்றார்கள்.

இவர்களுக்கு மூவாயிரம் ரூபா கொடுப்பனவு இம் மாதம்முதல் வழங்கப்படும் என ஈ.பி.டி.பி யின் மட்டக்களப்பு அலுவலகப் பொறுப்பாளர் பரணிதரன் பிரதீபன் தெரிவித்துள்ளார். (செ)

## உ. கிழங்கு விலை வீழ்ச்சி

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டில்கடந்த சில தினங்களாக உருளைக் கிழங்கின் விலைபெரும்வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக 200ரூபாவுக்குமேல் விற்பனையான உருளைக்கிழங்கு தற்போது 70ரூபாவாகவிற்பனையாகி வருவதைக்காணக்கூடியதாக உள்ளது.

அண்மையில் கப்பல் மூலம் பெருமளவு உருளைக்கிழங்கு எடுத்து வரப்பட்டமையே இந்நிலைக்கு காரணமென அறியப்படுகிறது.

(உ-223)

## சிந்தனைக்கு விருந்து

### தண்ணருளைத் தா

அம்மா! தயாபரியே ஆனந்த ரூபினியே!
இம்மா நிலத்தினிலின் றெங்கெங்கும்- எம்மால்
சகிக்க இயலாத சஞ்சலங்கள் தாயே!
தகித்தவற்றைத் தண்ணருளைத் தா

பழையவன்.

# தேசிய மட்டத்தில் ஆரம்ப நிலை மாணவரின்
# கணித பாட அடைவில் ஏற்றத் தாழ்வுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(8)

தம்பியப்பா காங்கேசபிள்ளை
M.Phil. (Edu) B.Sc., P.G.Dip.in-Edu. SLEAS
முது நிலை விரிவுரையாளர் (கணிதம்)
பலாலி ஆசிரியர் கலாசாலை.

### ஆசிரியர்

முறைசார் பாடசாலையில் அறிவையும், திறனையும் வழங்கும் முக்கிய பாத்திரம் ஆசிரியரேயாவார். வளம் குறைந்த கிராமப் புறங்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமான விகிதம் ஒப்பீட்டளவில் மிகக் குறைவாகும். ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரேனும் இல்லாத ஆரம்பப் பாடசாலைகளும் உள்ளன. குறிப்பாக குறை விருத்தியுள்ள பகுதிகளில் இந் நிலை காணப்படுகின்றது. உண்மை என்னவெனில், இப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கே கூடிய பயிற்சியும், அர்ப்பணிப்பும் தேவைப்படுகிறது. மேலும், இப்பாடசாலைகள் அநேகமாக மிக குறைந்த தகைமையுடன் ஆசிரியர்களையும், மிக அதிருப்தியான ஆசிரியர் - மாணவர் விகிதத்தையும் கொண்டுள்ளன. குறை வசதியுள்ள பகுதிகளில் ஆசிரியர் மட்டுமே கற்றலுக்கான மூலமாக இருப்பதினால் பிரதேச ஏற்றத்தாழ்வுக்குரிய காரணங்களுள் இதுவும் ஒன்றாக இருக்கலாம். தொடர்ந்து இந் நிலை நிலவி வருகிறது, 1971 இல் பயிற்றப்பட்ட ஆசிரியர்-மாணவர் விகிதம் இரத்தினபுரி மாவட்டத்தில் 1:53 ஆகவும், மாத்தளை மாவட்டத்தில் 1:48 ஆகவும் இருந்தது.

குறை வசதியுள்ள பகுதிகளில் கற்றலுக்கான சூழல் காணப்படாமையினாலும், மாணவருக்கு முறைசார் கற்றலுக்கான எவ்வித மாற்று வழிகளும் இல்லாததினாலும் திருப்தியற்ற ஆசிரியர்-மாணவர் விகிதம் வசதி படைத்த பாடசாலைகளைவிடக் குறை வசதிகளையுடைய கிராமப் பாடசாலைகளைக் கூடுதலாகத் தாக்குகின்றன. அநேகமாக இப் பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் நகரப்புற, நகர்சார் பகுதிகளுக்குச் செல்ல விளைகின்றனர். தரப்பட்ட வசதியற்ற பாடசாலையின் ஆசிரியர்-மாணவர் விகிதம் அம்மாவட்டத்துக்கான சராசரி விகிதத்திலும் மிகவும் குறைவாகும். எனவேதான். ஆசிரிய பயிற்சி நெறியிலும், குறைவசதியுள்ள கிராமப் பாடசாலைகளிலும் கையாளக் கூடிய பொருத்தமான கற்பித்தல் திறன்களின் அபிவிருத்திக்கு விசேட கவனம் செலுத்த வேண்டும். தற்போது இலங்கையில் ஆரம்ப ஆசிரியர்களாக முதல் நியமனம் பெறும் ஆசிரியர்களில் அநேகர் ஆசிரியர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படும்போது, அவர்கள் விரும்பிய மூன்று நெறிகளில் ஏதாவது ஒரு நெறியில் பயிற்சியை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டதால், அவர்களில் அநேகர் ஆரம்ப நெறியை விட்டு, வேறு நெறிகளில்பயிற்சியைப் பெற்று வெளியேறுகின்றனர். இதனாலும் ஆரம்பப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படுவதும், அதன் காரணமாகவும் குறை வசதியுள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்- மாணவர் விகிதம் மேலும் குறைவடையும் சாத்தியக் கூறுகளும் அதிகமாக ஏற்படுகிறது.

ஆசிரியர் எப்போதும் கற்க வேண்டும்; அதனால்தான் சிறந்த ஆசானாக முடியும். இன்று அநேகஆரம்பப்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வெளிவாரிப் பல்கலைக்கழகப் பரீட்சைகளில் தேறி பட்டதாரிகளாகின்றனர் இதனால் அவர்களது கல்வித்தகைமை அதிகரிக்கின்றது. இதுபாராட்டப்பட வேண்டியதொன்றே, ஆனால் இவ்வாசிரியர்களில் அநேகர் தாம் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற பின்னர் ஆரம்ப நிலை மாணவருக்கு கற்பிக்கத்தயங்குவதுதான் வேதனைக்குரியதாகின்றது. இவர்கள் இடைநிலை, உயர்நிலைவகுப்புகளுக்கு கற்பிப்பதில்தமக்குப் பெருமையுண்டு எனஎண்ணுகிறார்கள் போலும். இதனாலும் குறை வசதியுள்ள கிராமப் பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்-மாணவர் விகிதம் இன்னும் வீழ்ச்சி காணுகின்ற நிலைஏற்படுகிறது.

எனினும் இப்பாடசாலைகளில் தீவிரமான ஆசிரியர் பற்றாக்குறை இருக்கவில்லை என இக்கற்கையிலிருந்து தெரிய வந்துள்ளது. ஆனால் ஆசிரியர் வரவு ஒழுங்கற்றதாகக் காணப்பட்டது ஏனெனில் போக்குவரத்து வசதியீனம் பெருமளவில் காணப்படுவதால் ஆசிரியர்உரியநேரத்துக்கு பாடசாலைக்கு சமுகமளிக்க முடியாதுள்ளது. ஆசிரியர் பாடசாலைக்கு அண்மையில் வசிப்பதற்கும், அதற்குரிய வசதிகளும் இவ்வாறான பாடசாலைச் சூழலில் இல்லை. மேலும் ஆசிரியர் பாடசாலைக்கு வரும் நாட்களிலும், தமது வதிவிடத்துக்கு திரும்பிச் செல்லக் கூடிய நம்பகமான போக்குவரத்து வசதி இல்லாததினால் உரிய நேரத்துக்கு முந்திச் செல்லவே ஆசிரியர்கள் விரும்புகின்றனர். அநேகஆசிரியர்கள் இந்நிலையிலிருந்து விடுபட்டு நல்ல பாடசாலைக்கு மாற்றம் பெறுவதிலேயே கண்ணாயிருக்கின்றனர். இதனால் கற்பித்தல் தரம், மாணவர் ஊக்குவிப்பு, இணைப் பாடவிதானசெயற்பாடுகள், பாடசாலையின் உறுதிநிலை என்பன பாதிக்கப்படுகின்றன: இக்காரணங்களினால் ஆசிரியர் மாணவரின் கற்றலுக்கு உதவாது தவறுகின்றனர்.

இன்றைய ஆசிரியர் பயிற்சியும் கூட, இலங்கையிலுள்ள பாடசாலைகளில் 50% இற்கு அதிகமானவற்றுள் நிலவி வரும் இந்தஇயற்கையான மெய்மைகளுக்கு முகங்கொடுப்பதற்கான ஆசிரியர் திறமையை மேம்படுதுவதற்குரிய பயிற்சி வலிறுத்தப்படவில்லை எனலாம். மேலும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கற்பித்தல் பயிற்சிகளுக்காக பெரிய பாடசாலைகளைப் பயன்படுத்துவதோடு. கிராமப்புற வசதி குறைந்த பாடசாலைகளில் அதனை மேற்கொள்வதற்கான கவனமும் செலுத்துவதில்லை. உண்மையில் வறுமை, வளமின்மை, சுகாதாரமின்மை, கலாசாரப் பின்தங்கல், முன்னூக்கம் இன்மை போன்ற கிராமிய பாரம்பரியச் சொத்துக்கள் ஆசிரிய பயிற்சிப் பாடவிதானத்தில் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படுவதில்லை. எனவேதான் ஆரம்பநிலைக் கல்வியிலுள்ள பிரமுகத்துவம் ஆசிரியர்பயிற்சியிலிருந்து நீக்கப்படாவிடில் தாழ் அடைவு நிலைத்திருக்கும்.

தற்போதுள்ள பயிற்சிமுறை மிகுந்த வசதியுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பொருத்தமானதாக இருந்திருக்கலாம். ஆனால் வசதியற்ற பாடசாலை ஒன்றின் பிரச்சினைகளின்இயல்பு, வசதிபடைத்த பாடசாலையின் பிரச்சினைகளிலும் வேறுபட்டவை எனவே வசதியற்ற பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் அப்பாடசாலையின் இயல்பையும், பிரச்சினைகளையும் விளக்கி வசதியற்ற பிள்ளைகளின் தேவைகளுக்கும், கவர்ச்சிக்கும் பொருத்தமான முறையியலை விருத்தி செய்வதற்கு தமது கவனத்தைச் செலுத்த வேண்டும். பலதரக் கற்பித்தலுக்கான ஆற்றல் இங்கு மிகக் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது. எனவே தான் வசதிகளற்ற பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கு பல்தரக் கற்பித்தல், பரிகாரச் கற்பித்தல் முறைகளின் மிகச் சாத்தியமான நுட்பங்கள் தெரிந்திருக்க வேண்டும். எனவே, ஆசிரியர் பயிற்சி நெறிகளில் இத்துறைகளை உள்ளடக்குதல் வறுமை மிக்க, வசதியற்ற பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் பிரச்சினைகளை இலகுவாக்குவதற்கு உதவ முடியும்.

### சேவைக்கால ஆலோசகர்

சேவைக்கால ஆலோசகர் நெறியானது வசதியற்ற சமூகங்களிலுள்ள கற்றல்- கற்பித்தல் தொடர்பான பிரச்சினைகளில் பயிற்சி அளிப்பதினூடாகமேலும்பலப்படுத்தப்பட வேண்டும். வசதியுள்ள பாடசாலைகளுக்கும். வளமிக்கபிள்ளைகளுக்கும்தயாரிக்கப்பட்ட முறையியலும், நுட்பங்களும் வசதியற்ற பாடசாலைகளிலுள்ளஆசிரியர்களுக்கு வழங்கப்படக் கூடாது. கற்பித்தலுக்கு சூழல் வளங்களைப் பயன்படுத்தும் ஆற்றல், புத்தாக்க செயன்முறைகளை ஊக்குவித்தல் ஆகியனவே வசதியற்ற சமூகங்களிலுள்ள ஆசிரியர்களை வழிப்படுத்தலில்ஆசிரிய ஆலோசகரின் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவையாகும். சேவைக்கால ஆலோசகர்கள் கற்பித்தல் திறன்களை அவதானிக்கவோ அல்லது பங்கு பற்றிமேம்படுத்துவதற்கோ அடிக்கடி பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. ஆனால் ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகளும், எடுத்துக் காட்டல்களும் அநேகமாக நடத்துகின்றனர். இக் கருத்தரங்குகள் கூட வசதி குறைந்த பாடசாலைகளில் நடைபெறுவதில்லை. மாறாக வசதி கூடிய பாடசாலைகளில் இடம் பெறுகின்றன. இவ்வாறு ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

(தொடரும்)

---

## பொதுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

புளியங் கூடல் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர் வரும் 20 ஆம்திகதி சனிக்கிழமை, புளியங்கூடல் நெசவு சாலை மண்டபத்தில் தலைவர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(செ-75)

## திறப்பு விழா

(கோப்பாய்)

வலிகிழக்கு பிரதேச சபை, உரும்பிராய் உப அலுவலக தையல் பயிற்சி வகுப்பு திறப்பு விழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

வலி கிழக்கு பிரதேசசபைத் தலைவர் பூ. குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன், வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(எ-79)

## ஓவியப்போட்டி பரிசளிப்பு.

[யாழ்ப்பாணம்]

யுனிசெப் அனுசரணையுடன் லயன்ஸ் கழகம் கழக மட்டத்தில் நடத்திய ஓவியப் போட்டி பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யுனிசெப் திட்ட அதிகாரி எலியனோறாவும் சிறப்பு விருந்தினராக யாழ். வலய கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கமும் கலந்து கொள்கின்றனர்.

இப்போட்டி கட்டாயக் கல்வித் தினத்தை முன்னிட்டு கல்வியே செல்வம் என்ற தலைப்பில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [செ-106]

## சமயதீட்சை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமாநில இந்து மாமன்றத்தால் நாளை வெள்ளிக்கிழமை முதல் ஒவ்வொரு ஐப்பசி வெள்ளிக்கிழமைகளில் பாடசாலைகளில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக இந்து மாமன்றத்தின் செய்தி தொடர்பாளர் கே. எஸ். துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

நாளை நல்லூர் மங்கையற்கரசிமகாவித்தியாலயத்திலும் 26 ஆம் திகதி மருதனார்மடம ராமநாதன் கல்லூரியிலும், நவம்பர் 02 ஆம் திகதி சுழிபுரம் மகாவித்தியாலயத்திலும், 09 ஆம் திகதி கொக்குவில் ராமகிருஷ்ண வித்தியாசாலை, நெல்லியடி மகாவித்தியாலயத்திலும் வைத்து சமயதீட்சை வழங்கப்படவுள்ளது. [செ-104]

## வீதிக் கடவை குறியீடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பாடசாலைகளின் முன் வீதிகளிலும் காங்கேசன்துறை வீதியில் உள்ள பாடசாலைகளின் முன்பும் மாணவர் கடவைக் குறியீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

(உ-2)

---

க.பொ.த(சா/த)

## முன்னோடிப் பரீட்சை முதலாம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் க.பொ.த (சா/த)பரீட்சைக்குத் தோற்றவுள்ளயாழ். மாவட்டப்பாடசாலை. மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம்19ஆம்திகதி வரை நடைபெறவுளளது.

இதே வேளை, மூன்றாம் தவணைப் பரீட்சைகள்அடுத்தமாதம் 19ஆம் திகதிமுதல் ஆரம்பமாகவுள்ளன.

(உ-15)

## தீவக வலய உதைபந்து இறுதியாட்டம் இன்று

(ஊர்காவற்றுறை)

தீவக கல்விவலயப்பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும உதை பந்தாட்டப் போட்டியில் 18 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் இன்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு;

★ வேலணைசேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி அணி மோதவுள்ளது.

(செ-75)

## இராணுவத்தினரின் வாகனம் மோதியதில் தந்தையும் மகளும் காயம்

(மந்திகை)

மந்திகை கொடிகாமம் வீதியில் இராணுவ வாகனமும் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்றதகப்பனும்மகளும்காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் தவசி குளத்தைச் சேர்ந்த கந்தையா வெற்றிவேலு (வயது 55) அவரது மகளான வெ. எழிலரசி (வயது 12) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவார்.

இதேவேளை, கடந்த திங்களன்று குடத்தனைப் பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் இராணுவ வீரரின் சைக்கிள் மோதியதில் செம்பியன் பற்றைச் சேர்ந்த தர்மப்பிரகாசம் உதயதாஸ் (வயது 26) என்பவரும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-23)

---

### சுக வாழ்வு

எயிட்ஸ் நோயின் குணங்குறிகளில் ஒன்று ஒருமாதத்திற்கு மேல் தொடர்ச்சியான காய்ச்சல்.

(எயிட்ஸ்- வருமுன் காப்போம்)

-தரிசனம்.

மறப்பினும் ஓத்துக் கொள
லாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கங்
குன்றக் கெடும்

குறள்

வலம்புரி

## திரைப்படத் தாக்கம்

தமிழர் கலாசாரம், ஒழுக்கத்தை மையமாக வைத்தே கட்டியெழுப்பப்பட்டது. ஆனால் இப்போது இளைஞர்கள், யுவதிகளின் செயற்பாடுகள் ஒழுக்க வரம்பை மீறுவதாக இருப்பது மிகவும் வேதனைக்குரியது. இவர்களின் கட்டுப்பாடற்ற- கட்டு மீறிய செயற்பாடுகள் பெரியவர்களை இம்சைப்படுத்துவதாகவும், அமைந்துள்ளது.வீதிகளில், பயணம் செய்யும் இடங்களிலெல்லாம் இப்போது இளவல்கள்வயதில் முதிர்ந்தவர்களை, ஒரு பொருட்டாகக்கூடமதிப்பதில்லை.

அதிலும் ஆண்களும், பெண்களும் சேர்ந்து வீதியில் துவிச்சக்கர வண்டிகளில் செல்வார்களாயின் அங்கு நடக்கும்அட்டகாசத்தை, சொல்லவேண்டியதில்லை, போதுமடா சாமி என்றாகி விடும். அந்தளவு தூரம் எம் சமகால இளைஞர், யுவதிகளின் போக்கு அமைந்து விட்டது.

பெற்றவர்களேபிள்ளைகளைக் கட்டுப்படுத்த அஞ்சும் காலம். இதனை பெரியவர்களின் மொழியில் கூறுவதாயின் கலிகாலம் எனலாம் எதுநடக்கக் கூடாதோ அதெல்லாம் நடந்தேறும் காலமும் இதுவே.

இஃது கலாசாரத்தில்- ஒழுக்கத்தில் ஊறிப்போனவர்களால் சகிக்க முடியாது.

தமிழினத்திற்கு தனியொரு கலாசாரம் உண்டென மார்தட்டி முழங்கி மேலை நாட்டுக் கலாசாரங்களை ஏளனம் செய்த நாம் இபபோது மேலை நாட்டுக் கலாசாரத்தின் பிடிக்குள் சிக்குண்டு விட்டோம்.

இதனைவிட தென்னிந்தியத் திரைப்படங்கள் எமது இளைஞர்கள் மத்தியில் வலுவான- ஆற்றுப்படுத்த முடியாத தாக்கத்திற்கு ஆளாக்கி விட்டன. இதன் வெளிப்பாடே, இளம்பெண்களை- மாணவிகளை, கடத்திச் செல்வது, காதல் சேட்டை விடுவது, என்ற ரவுடித்தனம் நீண்டு செல்கிறது.

ரவுடித்தனத்தைச் செய்யும் நோக்கத்திற்கு ''கராத்தே'' பயிற்சிகளும் களம் அமைத்துக் கொடுக்கின்றன. எதுவாயினும் இவற்றுக்கெல்லாம்பொது மக்கள் விழித்தெழுந்து ''தர்ம அடி''கொடுத்தால் திருத்தம் தன்பாட்டில் ஏற்பட்டு விடும்.

# அன்பினால்உலக அமைதியை உருவாக்கலாம்

# என்பதையே சாயிபாபா உணர்த்துகின்றார்

இன்று உலகில் அமைதியின்மை, நீதியற்ற செயற்பாடுகள், ஒழுக்கமில்லாத வாழ்க்கை, குழப்பம் ஆகியவை காணப்படுகின்றன. மக்களும் விரக்தியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானம், தொழில்நுட்பம் மிக முன்னேற்றம் அடைந்து மனிதனின் வசதிகளை அதிகரித்திருக்கிறது; அதேசமயம் ஒரு தனி மனிதனுடைய கோபம் அல்லது வெறுப்பு இவ்வுலகத்தினையே அழிக்கவல்ல சக்தியைப் பெற்றிருக்கிறது. உலக நாடுகளிடையே போட்டி அதிகரித்துக் காணப்படுகிறது. உலகின் சனத்தொகை அதிகரித்துச் செல்கின்றது; சனத்தொகையில் ஏற்படுகின்ற பெருமாற்றம் உலகில் அமைதியின்மை ஏற்பட ஓர் காரணமாக அமையும். ஏனென்றால் சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக வருங்கால சந்ததியினர்,

★ போதிய வீட்டு வசதிகள்,
★ மருத்துவ வசதிகள்,
★ கல்வி வசதிகள்,
★ தொழில் வாய்ப்புக்கள்,
★ காணிவசதிகள் இல்லாது இருக்கப்போகிறார்கள்.

பெரும்பாலான நாடுகள்தற்போதுகாணப்படுகின்ற தமது நாட்டு மக்கள் தொகைக்கு போதிய வசதிகளை வழங்க முடியாதுவளம்பெற்ற நாடுகளின் உதவியை எதிர்பார்க்கின்றன. அத்தோடு உணவு அருந்தாத காரணத்தினால் மக்கள் மடிகின்ற நிலையும் காணப்படுகின்றது.

### பிற உயிர்களில் அன்பு வேண்டும்

இப்படியான சூழ்நிலையை மாற்றி மனிதரிடையே ஒரு சுமுகமான, ஆனந்தமான சூழ்நிலையை ஏற்படுத்தப் பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கை மக்களிடையே வளர்ப்பது மிகவும் அவசியம் பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கு மனிதனிடத்திலே ஏற்பட வேண்டுமாயின் அவன் காருண்ய உணர்வுகள். நிறைந்தவனாக இருத்தல் வேண்டும். மனிதன் பிற உயிர்களில் அன்பு உடையவனாக இருக்கும்போதுதான் தனது வளங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கு தோன்றும்.

மனிதன் தான் நேசிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறானே தவிர தான் பிறரை நேசிக்க வேண்டுமென எண்ணுவதில்லைஎன்று பேட்றண்ட ரஸல் தெரிவிக்கிறார்- எப்பொழுது மனிதன் பிறர் மேல் அன்புசெலுத்தும் தன்மையை அடைகிறானோ அப்பொழுதே அவன் மிகஉயர்ந்த ஆற்றல் மிக்கவனாக மாறத் தொடங்குகிறான்; பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தமது அற்புத சக்தி தனது அன்பு சக்தியே எனப் பலமுறை கூறியுள்ளார். அத்தோடு;

அன்பு வாரம் - 2001 ஒக்ரோபர் 15 திங்கள் தொடக்கம் 21 ஞாயிறு வரை கொண்டாடப் படுகிறது,

கே. வி. சிவநேசன்

''அன்போடு நாளினைத் தொடங்கிடுக
அன்போடு நாளினை செலவு செய்க
அன்பினால் நாளினை நிரப்பிடுக
அன்பினால் நாளினை நிறைவு செய்க

இதுவே இறைவனை அடையும் வழி'' என்று கூறியுள்ளார். எல்லோரிடத்திலும் இருக்கும் இறைவனை நேசியுங்கள'' எவரையாவது நீங்கள் துன்புறுத்தினால் அது என்னைத் துன்புறுத்தியதாகும் என்று கூறுகிறார்.

### சக்தி மிக்க அதிர்வுகள்

தூய தன்மையற்ற அன்பு மிக உயர்ந்த அதிர்வுகளை எம்மில் உற்பத்தி செய்யக் கூடியது.அன்பைநாம் எம்மில் நிறைத்துக்கொண்டால்அன்பு எம்மில் இருந்து எப்போதும் வெளிப் படடுக் கொண்டே இருக்கும். அன்பு நிறைந்தவர்களில் இருந்து வெளிப்படும் சகதி மிகக அதிர்வுகள் எதிரிகளை நண்பர்களாக்கக் கூடியவை. ஒரு மனிதனின் இதயத்தை மிக மென்மையானதாக மாற்றும் வலிமை வாய்ந்தது; நாம் இந்த உலகத்தில் ஆயுதங்களினால் அல்லது பலாத்கார த்தினால் கொண்டுவர முடியாத அமைதியை கொண்டுவரக்கூடிய சக்தி அன்பிற்கே உண்டு,

டாக்டர் இராதாகிருஷ்ணன் 1950இல் ருஷ்ய நாட்டில் இந்தியாவின் தூதுவராகக் கடமை புரியச் சென்றிருந்தார். அக்காலத்தில் ருஷ்ய நாட்டு ஜனாதிபதியாக இருந்தவர் ஜோசெப் ஸ்ராலின் என்பவர். அவர் அக்காலத்தில் வாழ்ந்த சர்வாதிகாரி. அவரிடம பேசுவதற்கு பெரிய பதவி வகிப்பவர்கள்கூடப் பயப்படுவார்கள். டாக்டர். இராதாகிருஷ்ணன் தூதுவராகச் சென்றபோதுயோசெப் ஸ்ராலினைச் சந்தித்தார். மீண்டுமதிரும்பிஇந்தியாவிற்கு வரும் போதும் சந்தித்தார். இந்த சந்திப்பு முடிந்தபோது டாக்டா இராதாகிருஷ்ணன ரஷ்ய ஜனாதிபதியின் முதுகில் தட்டி மற்றயாவரும் செய்யப்பயப்படுவார்கள்- கவலைப்படாதீர்கள் எல்லாம் நன்றாக நடக்கும் என்று கூறி விடைபெற்றுசெல்லமுறபட்ட போது அழும சத்தமகேட்டது இராதாகிருஷ்ணர் திகைத்துப் போய் அண்மையில் சென்று நான் ஏதாவதுதவறாகசொன்னேனா என்று கேட்டார். அப்பொழுது ஸ்ராலின் நீங்கள் ஒருவா தான் என்னை மனிதனாக எண்ணி நடந்துகொண்டீர்கள் என்றுகூறினார். ஸ்ராலின் தனதுவாழ்வின் ஆரமபத்தில் அன்பைப் பெற்றிருந்தால் அவர் உன்னதமான மனிதராக இருந்திருப்பார்.

### ஆராய்ச்சியில் அன்பு

வாழ்வில் முக்கியமான அன்பின் சக்தியைப் பரிசோதனை மூலம் செய்துகாட்டுவதற்காக தாய்லாந்தில் ஒரு பல்கலைக் கழகததில பரிசோதனைமேற்கொள்ளப்பட்டது. ஒரேவிதமான மண்ணில்ஒரேவிதமான ஒரே அளவு உயரம கொண்ட இரு செடிகள் இரு பாத்திகளில் வைத்து ஒரே விதமாக பராமரிக்கப்பட்டன, ஒரு பாத்தியில் உள்ள செடிக்கு மாணவர்கள் மேலதிகமாக தங்கள் அன்பை மட்டும் செலுத்தினார்கள். மூன்று வாரங்களிற்கு பிறகு அதன் வளர்ச்சி அளவிடப்பட்டபோது அன்புசெலுத்தப்பட்ட செடி 49.5 வீதம வளர்த்தி அதிகமாகக் காணப்பட்டது. எனவே எல்லா வித செயற்பாடுகளும்ஒரே விதமாகஇருந்தும் அன்பு செலுத்தப்பட்ட செடி வளர்ச்சி அதிமாக இருந்ததற்கு 'அன்பே' காரணமாக இருந்தது. எனவே பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் அன்புதான் அதீத வளர்ச்சிக்குக் காரணம் என்ற முடிவிற்கு வந்தார்கள்.

இதே பல்கலைக் கழகத்தில் ஒரு மாணவன் 3 மணித்தியாலயங்கள் ஒரு செடியின் அருகில் இருந்து அதனை வெறுப்போடு பார்த்துக் கோபமாக வைது கொண்டிருந்தான். மூன்று மணித்தியாலயங்களில் அப்பயிர் வாடி விட்டது அத்தோடு அந்த மாணவனிற்கு ஒரே தலைவலி வயிற்றுக் கோளாறு, தேகநோ. எனவே நாம் கோபத்தை தாவரம், மிருகம் மனிதர் மேல்பிரயோகித்தால் எமக்கும்அதே பாதிப்புஏற்படும் என்பது நிரூபிக்கப்பட்டது,

### அன்பினால் அமைதி

எனவே மற்றவர்களை நாம் இகழும் போதுநாம்எம்மையே விருத்த முறபடுகிறோம்; அதேபோலநாமதூய அன்பை வெளிப்படுத்தினாலநாம் சாந்தியால் நிரபபப்படுவோம், எனவே மாணவர்கள், பெரியவர்கள எல்லோரும் தாவரங்கள, மிருகங்கள, மனிதர் இயற்கை, சூழல் எழுலாவற்றையும் நேசிக்க வேண்டும். அன்பான எண்ணங்களோடு வாழ வேண்டும. எமது அன்பு ஒரு பிரததியோகமான மனித இயலபு நாம அன்பு உடையவர்களாக இருந்தால் நாம் நிறைய சாந்தி உடையவர்களாக இருப்போம். இது எமது ஆளுமையை முழுமையாக விருத்தி செய்து வளர்க்க உதவும். பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபா எங்கள அனைவருக்கும் வழங்கிய அருமையான செய்தி 'நீங்கள ஒவ்வொருவரும் வளர்த்துக் கொளள வேண்டியது அன்பு தான். அன்பு வளர்க்கப்பட்டால் வெறுப்பிற்கு இடமே இருக்காது.அன்பு என்றவிதையை அன்பற்றவர் உள்ளங்களில் விதைகக வேண்டும். அன்பு என்ற நீர் ஊற்றி வளர்க்க வேண்டும். அன்புவெள்ளமாக ஒடி இந்தஉலகில் எல்லோரையும் அடைய வேண்டும். தூய உறுதியான தன்னலமற்ற அன்பை நாம்ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அன்பை வளர்த்து அதன் மூலம் உலகில் அமைதிதோன்றிட வழிவகுப்போம்

## சாயி அருளமுதம்

### அவர்கள் மனிதர்களே அல்லர்



புனிதமான செயல்களுக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்கள் மனிதர்களே அல்லர். அவர்கள் உண்மையில் பிசாசுகளே. முழு உலகமே அத்தகைய பிசாசுகளால் நிரம்பினாலும் சாயியின் உறுதிப்பாடு ஒருபோதும் மாறாது. சிலர் தமது இழிவான மனம் காரணதது னால், சாயி பாபாவின்மகிமைக்கு களங்கம்ஏற்படுத்த முயல்கிறார்கள். நான் பேரும் புகழும் நாடாதவன். ஆகவே பொய்யான பிரசாரத்தின் மூலம் நான் இழப்பது ஒன்றும் இல்லை. எனது மகிமை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே இருக்கும்: அவர்கள் முழு உலகிலும், தமது பொய்யான குற்றச்சாட்டுக்களை தடித்த எழுத்துக்களில் விளம்பரப்படுத்தினாலும் எனது மகிமை இம்மியும் குறையாது;

சனாதன சாரதி

## மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்

(மந்திகை)

மிருசுவில் கழிக்கரைகடலில் மீன்பிடிக்கச் சென்றகுடும்பஸ்தர் நேற்றுசடலமாக மீட்கப்பட்டார்.

மிருசுவில்வடக்கைச்சேர்ந்த நாதன் பாலசுந்தரம்(வயது 48)என்ற ஆறுபிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவர்.

நேற்றுமுன்தினம்மீன் பிடிக்கச்சென்றவரைக் காணாத நிலையில் நேற்று கடற்பகுதியில் தேடியபோதே அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கொடிகாமம் பொலிசார் சடலத்தை அங்கிருந்துமீட்டு நேற்றுமாலை பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

மரணவிசாரணை இன்று இடம்பெற்று சடலம்உறவினர்களிடம கையளிக்கப் படும்; (இ-23)

# கூட்டணியில் யாழ். வேட்பாளர் பட்டியலில் சுரேஸுக்கு இடமில்லை

## ஆனந்தசங்கரி அறிவிப்பு

(கொழும்பு)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பில் போட்டியிடும் கட்சிகளில் ஒன்றான ஈ. பி ஆர். எல். எவ் (சுரேஷ்அணி) ஐச்சேர்ந்தசுரேஷ் பிரேமசச்ந்திரனுக்கு யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலில் இடம் வழங்கப்பட மாட்டாதென அக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்;

தேர்தல் இட ஒதுக்கீடு சம்மந்தமாக கூட்டணி ரெலோ ஈ பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) தலைவர்கள் நேற்றுக் கூடிஆரய்ந்தபோதே ஆனந்த சங்கரி மேற்படி கருத்தினைத் தெரிவித்தார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் விரும்பினால் வவுனியாவில் ரெலோவின் தேர்தல் பட்டியலில் போட்டி இடலாம் என்றும் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்;

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் கிளையினர் ஈ.பி.ஆர்.எல். எவ் சார்பில் எவரையும் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிட அனுமதிக்கக் கூடாதெனக் கேட்டுக் கொண்டதை அடுத்தே சுரேஷ்பிரேமச்சந்திரனுக்கு கூட்டணியின் பட்டியலில் இடம் கொடுக்கப் படவில்லையெனத்தெரிய வருகிறது; (வ)

# சமாதான நீதிபதிகள் 18பேர் பதவி நீக்கம்

## மோசடி செய்தனராம்

(கொழும்பு)

நாடுதழுவிய ரீதியில் சமாதான நீதிபதிகள் 18பேர் அரசாங்கத்தினால் பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர் இவர்களின் பதவியை நீக்கும் நடவடிக்கையை நீதிஅமைச்சர் பட்டி வீரக் கோன் மேற்கொண்டிருந்தார்;

பதவி நீக்கம்செய்யப் பட்ட 18சமாதான நீதிவான்களும் முறையற்ற விதத்தில் பதவியைப்பயன்படுத்திக் கொண்டமையினாலேயேபதவிபறிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்சப் படுகிறது;

இதேதேளை மேலும் 200க்கும் மேற்பட்ட சமாதானநீதிவான்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதையடுத்து அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது; (வ)

## முக்கிய அறிவித்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டவிதி 18(1)ன்கீழ் யாழ்,மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின்

### விசேட பொதுக்கூட்ட அறிவித்தல் 2001-10-20

யாழ்; கூட்டுறவு அபிவிருத்தி உ தவி ஆணையாளர் அவர்களின் யா/கூ/அ/1639 இலக்கம் கொண்டதும் 2001.09.26ம் திகதிய கடிதத்தின் பிரகார கூட்டுறவுச் சங்க சட்டவிதி 18(1)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி திரு. நாகலிங்கம் தவநாதன் தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம் ஆகிய என்னால் யாழ். மாவட்ட அபிவ்ருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஒன்றுக்கு அழைக்கப்படுகிறது, கூட்டம் எனது தலைமையில் நடைபெறும்,

இடம்:- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கலாசாலை வீதி, திருநெல்வேலி.
காலம்:- 2001-10-20 சனிக்கிழமை
நேரம்:- மு. ப. 10.00 மணி [புதிய நேரம்]

### நிகழ்ச்சி நிரல்

★ இறைவணக்கம்
★ தலைமை உரை
★ புதியதுணைவிதி அங்கீகரித்தல்
★ நன்றியுரை

மேற்படி சங்கத்தின் வாக்களிக்கத் தகைமை பெற்ற உறுப்பினர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்,

குறிப்பு:-

1. அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளதனால் அவர்களின் தனிப்பட்ட விலாசததை அறிந்து கொளள முடியாத நிலையில் தனிபபட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியவில்லை என்பதைத தயவுடன் அறியத் தருகிறேன். இப்போது அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்று அங்கத்தவர்கள் தயவு செய்து தவறாது கூடடத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.
2. மாதிரி உபவிதியை சங்கக் காரியாலய வேலை நாட்களில் காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 4.30மணி வரை சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

நா. தவநாதன்
தலைமைக்காரியாலயக் கூட்டுறவுப் பரிசோதகர்

கூட்டுறவு அலுவலகம்,
இல; 857 கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
2001-10-15

(C- 2753)

---

வெலிக்கந்தையில்

தாக்குதல் சம்பவத்தையடுத்து வெலிகந்தப் பகுதிக்கு விரைந்த பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்;

இதேவேளை விடுதலைப் புலிகள் ரோந்து சென்ற படையணி மீது தாக்குதல் நடத்திய நேரத்தில் வெலிகந்தை முகாம் மீதும் ஏக காலத்தில் தாக்குதலைத் தொடுத்தனரென படைத் தரப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வெலிகந்த கெப்பிற்றிப் கொலாவைப் பகுதியில் வீதிரோந்துப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிசார் மீதுவிடுதலைப் புலிகள் நேற்றுக்காலை நடத்திய கண்ணிவெடித் தாக்குதலினால் இரண்டுபொலிசார் கொல்லப்பட்டனர்.ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்; (இ)

---

கூட்டணி

யம் காங்கிரஸ் தலைவர்களுக்கும் மற்றும் தமிழ்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டபோது காங்கிரஸ்தலைவர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறிய சம்பவங்களும இடம் பெற்றன,

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக தமிழ்க்காங்கிரஸ் வைத்த கருததுக்களையும்,நிபந்தனைகளையும் ஏறறுக் கொண்டதையடுத்து. அதன் அடிப்படையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'உதயசூரியன்' சின்னத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் போட்டியிட நான்கு தமிழ்க் கட்சிகளும் இணக்கம் கண்டுள்ளன,

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு அவர்களை அங்கீகரிப்பதென தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ, காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல். எவ், [சுரேஸ் அணி] ஆகிய நான்கு கடசிகளும் முடிவு எடுத்துள்ளன,

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடவுள்ள நான்கு தமிழ்க்கட்சிகளிலும், கூட்டணியினருக்கு கூடுதல் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஒன்பது ஆசனங்களைக் கொண்ட யாழ் மாவட்டத்தில் தமிழ்க் காங்கிரஸிற்கு 3 இடங்களும் கூட்டணிகமு 6 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளது,

ஆறு ஆசனங்களைக் கொண்ட வன்னியில் 2 ஆசனங்கள் ரெலோவும் ஏனைய 4 ஆசனங்கள் கூட்டணிக்கும் ஒதுக்கப் பட்டுள்ளது. [வ]

---

# நிதி உதவி பெறும் அமைப்புக் களுக்கான கூட்டம் நாளை நடக்கும்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்,யாழ்ப்பாணம் பிரதேசசெயலர் பிரிவில் வடக்குபுனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்டநிதியில் முதற்கட்டத்தைப் பெற்றுக் கொண்ட நிறுவனங்களதும் புதிதாக நிதிஒதுக்கீட்டினைப் பெறவுள்ள நிறுவனங்களினதும் நிர்வாகிகளை நாளை 19ந்திகதிகாலை 10மணிக்கு யாழ்; ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மணியம் கட்டடத்திலுள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர்பிரதேசசபைத்தலைவர் க.மணி பல்லவராஜன் கேட்டுள்ளார்; (கு)

# இஸ்ரேலின்சுற்றுலாத்துறை அமைச்சர் சுட்டுக்கொலை!

(ஜெருசலம்)

இஸ்ரேலின் சுற்றுலாத்துறை அமைச்சர் நேற்றுநண்பகலில் விடுதிஒன்றில்வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரதுகொலை தொடர்பாக பலஸ்தீன விடுதலை முன்னணி உருமைகோரியுள்ளது இவ்வமைப்பின் தலைவர் அபுஅலிமுஸ்தபா கடந்த ஓகஸ்ட்மாதம் இஸ்ரேலிய இராணுவத்தின் றொக்கட் தாக்குதலில் கொல்லப்பட்டிருந்தார் இதற்குபழிவாங்கும் முகமாகவே இத்தாக்குதலை மேற்கொண்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்;

பலஸ்தீனப் பகுதியிலிருந்து இஸ்ரேலிய இராணுவம் வெளியேறுவது தொடர்பாக அதிருப்தியடைந்த இவர் கடந்த திங்கள்அரசியலிலிருந்துவிலகுவதாக அறிவித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (ந-5)

# தேர்தல் நீதியாக நடக்க கட்சிகள் உதவ வேண்டும்

## பல தரப்பும் கோரிக்கை

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெறுவதை தேர்தல்ஆணையாளர்உறுதிப் படுத்த வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பாளர்களும் மற்றும் பொது அமைப்பினரும் தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தேர்தல் நீதியானதாகவும் நியாயமாகவும் நடைபெறுவதற்கு தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் மற்றும் சுயேட்சை அபேட்சகர்களும் ஒத்துழைக்க வேண்டுமெனறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அரசியல் அமைப்பின்17வது திருத்தச் சட்ட மூலத்தின் கீழ் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தேர்தல் ஆணையாளர் முழுமையாக பயன்படுத்த வேண்டுமென்றும் இவர்கள் கேட்டுள்ளனர்.

இம்முறை பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு பத்தாயிரத்திற்கும் அதிகமான தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஈடுபடவுள்ளனர்;

இதேவேளை சுமார் 80 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படுவார்கள் என்றும் இவர்கள் பெரும்பாலும்வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கே அனுப்பிவைக்கப்படவுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது; (வ)

# ஐ.தே.கட்சியுடன் இணைந்து ஹக்கீம் கண்டியில் போட்டி!

(கொழும்பு)

எதிர் வரும் பொதுத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்துமுஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் போட்டியிடவுள்ளார்.

கண்டியில் போட்டியிடுவது குறித்து ஹக்கீம் கருத்துதெரிவிக்கையில்;

ஐ; தே, கட்சியுடன் இணைந்து கண்டியில் போட்டியிடுவதினால் ஐ தே. கட்சி ஆதரவாளர்கள முஸ்லிம்காங்கிரசுக்கு பேராதரவு வழங்குவார்கள்;

அதேவேளைஎனதுஆதரவாளர்கள் கிழக்கு மாகாணத்திலும் கொழும்பு மாவட்டத்திலும் என்னைப் போட்டியிடுமாறு வற்புறுத்துகின்றனர்.

ஆனால் கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரசின் பிரதிநிதித்துவம் இழந்து போகக் கூடாதென்பதற்காகவேநான் கண்டியில் போட்டியிடுகின்றேன்.

முஸ்லிம்காங்கிரஸ்சார்பாக ரவூபஹக்கீம் கடந்த வருடம் கணடிமாவட்டத்தில்போட்டியிட்டு 35 ஆயிரத்துக்கும்மேற்பட்ட வாககுகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார்,

இதேவேளை ஐ தே. கட்சியும கூட்டிணைந்து ரவூப் ஹக்கீம்கண்டியில் போட்டியிடவுள்ளதையடுத்து கண்டி மாவட்டஐ தே. கட்சிஅமைப்பாளரும் முன்னாள் எம்பியுமானஎம்.ஆர்.எம்.காதரைவு தேசியப்பட்டியல் மூலம்தெரிசெய்ய ஐ.தே.கட்சி முடிவு செய்துள்ளது, (இ)

---

பருத்தித்துறை

வட்ட நீதிமன்ற வளாகத்தைச் சென்றடைந்தனர்

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட விழிப்புக் குழுவைச் சேர்ந்த எட்டுப் பேரையும் பொலிஸார் பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றில் நீதிவான் அ. பிறேம்சங்கர் முன்நிலையில் ஆஜர் செய்தனர்;

விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி பத்தாயிரம் ரூபா காசுப் பிணையிலும், சரீரப்பிணையிலும் அவர்களை விடுதலை செய்தார்

இவர்கள் விடுதலை செய்யப்பட்டதை யடுத்து பகிஷ்கரிப்புப்போராட்டம்கைவிடப் பட்டது [ந-41,23,217]

---

பாழடைந்த

சடலம் பருததித்துறை 2ம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அமிர்தலிங்கம் (வயது-50) என்பவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

மரணவிசாரணைகளைபருத்தித்துறை மாவட்ட நீதிபதி அ.பிறேம சங்கர்மேற்கொண்டார்பிரேத பரிசோதனையை மாவட்ட வைத்திய அதிகாரி சி. கதிரவேற்பிள்ளை நடத்தினார்.

விசாரணைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது; (ந- 41-23)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.